சரசுவதி மகால் - வழிகாட்டி நூல்

(படங்களுடன்)

அ. பஞ்சநாதன்

சரசுவதி மகால் வெளியீட்டு எண். 260

சரசுவதி மகால் – வழிகாட்டி நூல்

(படங்களுடன்)

அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் &
நிருவாக அலுவலர் (பொறுப்பு),
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

1992

[விலை ரூ. 10—00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சரசுவதி மகால் - வழிகாட்டி நூல்
ஆசிரியர்	:	அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால்
வெளியீட்டு எண்	:	260
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	நவம்பர், 1992
தாள்	:	10. 9 கி, கி. சேஷசாயி
நூல் அளவு	:	25 x 19 செ. மீ.
பக்கங்கள்	:	82
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	வரலாறு
விலை	:	ரூ. 10—00

இரண்டாம் பதிப்பின்
வெளியீட்டாளர் முகவுரை

****

உலகின் அறிவு நூற் களஞ்சிய மையங்களில் ஒன்றாகவும், ஒப்புயர்வற்றதாகவும் திகழுகின்ற சிறப்புடைய நிறுவனம் சரசுவதி மகால் நூலகம் ஆகும்.

பல மொழிகளைச் சார்ந்த ஏராளமான அரிய பனையோலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், பல மொழித்துறைகள், அருங்காட்சியகம் முதலிய வற்றைத் தன்னகத்தே கொண்டு, எண்ணற்ற ஆய்வாளர்களையும், வாசகர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் எட்டுத் திக்கிலிருந்தும் ஈர்த்து வருகின்ற — பயன்பட்டு வருகின்ற இந்த அரும் பெரும் நிறுவனத்தின் அருமை, பெருமைகளை, செயல்பாடுகளை அனைவரும் அறிந்து பயன்பெறும் நோக்கத்தில் எழுதப்பட்ட "சரசுவதி மகால் வழிகாட்டி நூல்" இரண்டாம் பதிப்பாக இப்பொழுது வெளிவருகின்றது.

இந்நூல் 1988ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்தது. இப்பொழுது இந்நூல் கால வளர்ச்சியையும் அன்பர்களின் வேண்டுகோளையும் கருத்தில்கொண்டு விரிவாக எழுதப்பெற்று இரண் டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

இந்நூலைச் சரசுவதி மகாலில் பல்லாண்டு களாகப் பணிபுரிந்து வருகின்ற வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகரும் நிருவாக அலுவலருமான (பொ)

திரு. அ. பஞ்சநாதன் அவர்கள் எழுதிச் சிறப்பாக உருவாக்கியுள்ளார். இரண்டாம் பதிப்பாக வெளி வரும் இந்நூலை முதற்பதிப்பினும் மெருகாக — சிறப்பாக வளப்படுத்திப் படைத்துள்ளார். மேலும் சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ள அரிய ஓவியங்களில் சில இந்நூலின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டிருப்பது இந்நூலுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாக உள்ளது. சரசுவதி மகாலைப் பற்றி அறிந்துகொள்ள விழையும் அனைவருக்கும் பேருதவியாக அமையும் இந்நூலைச் செம்மையுறப் படைத்துத் தந்துள்ள அவருக்கு என் பாராட்டுகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலைச் சரசுவதி மகால் நூலக அச்சகத்தினர் நன்முறையில் அச்சிட்டுள்ளனர். நூலக அச்சகப் பணியாளர்களுக்கு எனது பாராட்டுகள். இந்நூல் உருவாகத் துணைநின்ற தமிழ்ப் பண்டிதர் ப. மணிகண்டன் அவர்களுக்கும் ஏனைய மகால் பணியாளர்களுக்கும் என் பாராட்டுகள்.

கலை ஆர்வமும், கல்வித்துறைமீது வேட்கையும், சுற்றுலாவியலில் ஈடுபாடும் கொண்ட அனைவருக்கும் இவ்வழிகாட்டி நூல் சிறப்பாக வழி காட்டும் என்பது திண்ணம்.

தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)

தஞ்சாவூர்.
14—11—92

***

பதிப்புரை

தஞ்சைப் பேரரசர் சரபோசியின் சரசுவதி மகால் நூலகம் உலகப் புகழ் பெற்றது. இந்நூலகம் ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்கள் காலத்தே தொடங்கப்பெற்று, 16-ஆம் நூற்றாண்டுமுதல் வளம்பெற்றுத் தற்போது ஒரு தேசிய ஆராய்ச்சி மையமாக வளர்ந்துள்ளது. நூலகத்தைப் பார்த்துப் பயனடையும் இந்நாட்டவரும், பிற நாட்டவரும் இதன் சிறப்புகளை உணர்ந்து மகிழ்கின்றார்கள். வருகைதரும் பார்வையாளர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடன் 1984-ஆம் ஆண்டு, ஆங்கிலத்தில் ஒரு வழிகாட்டி நூல் அச்சிடப்பட்டு, தற்போது இரண்டாம் பதிப்பும் வெளிவர இருக்கிறது. இந்நிலையில் தமிழில் ஒரு வழிகாட்டி நூல் அமைந்தால் பார்வையாளர்களுக்குப் பெரும் பயன் அளிக்கும் என்று பலர் தெரிவித்ததற்கிணங்கத் தமிழில் வழிகாட்டி நூல் அச்சிடப் பணிக்கப்பெற்று அதனை முடிக்கும் பணி இந்நூலகப் புத்தக வெளியீட்டு மேலாளர் மற்றும் முதல்நிலை நூலகர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். எஸ்சி. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் இப்பணியில் பெரிதும் ஊக்கம் காட்டி, தேவையான ஆவணங்களை ஆய்ந்து, நூலகத்தில் இலங்கிவரும் அறிவுப் படைப்புகள் பலவும் குறித்து சிறுகுறிப்பும், தஞ்சை மண்டல வரலாற்றுக் குறிப்பினையும் தேர்ந்த முறையில் தொகுத்து, இந்நூலினை நன்முறையில் ஆக்கியுள்ளார். அவருக்கு எனது பாராட்டுகள்.

இந்நூலை அச்சிட்டுத் தந்த ஓம் சக்தி அச்சகத்தாருக்கும், இதனை உருவாக்கப் பலவற்றிற்கும் உதவிய நூலகப் பணியாளர்களுக்கும் பாராட்டு கூறி மகிழ்கின்றேன்.

மகால் வளம் காண இந்நூல் நல்வழிகாட்டியாகும்.

மா. இராமு, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

தஞ்சாவூர்,

16—2—88.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்.
15—11—92.

தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

பதிப்பாசிரியர் முன்னுரை

தஞ்சாவூர் மகாராஜா சரபோசி சரசுவதி மகால் நூல் நிலையம் மக்களால் கல்விக் கருவூலம் எனக் கருதப்படும் ஓர் அரிய நிறுவனம். இந்நூலகத்தேயுள்ள அரிய பழைய சுவடிகள் அறிஞர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் வருக வருக என அழைத்தவண்ணமுள்ளன. நான் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குமுன் இதன் நிருவாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்டேன். இந்நிறுவனத்தைப் பார்வையிட இந்திய நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், கடல் கடந்த நாடுகளிலிருந்தும் அறிஞர்க்ள் வந்து செல்கின்றனர்.

இந்நூலகத்தைப் பற்றிய வழிகாட்டி நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதைப்போல் இந்தியிலும் "சரசுவதி மகாலுள் ஒரு பார்வை" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. நூலகத்தைப் பார்வையிட வருபவர்களில் பலர் ஆங்கிலம், இந்தி தெரியாத தமிழ் நாட்டவர்கள், நிருவாகப் பொறுப்பில் இருந்த என்னிடம் தமிழில் ஒரு வழிகாட்டி நூல் வெளியிட்டால் ஆங்கிலம், இந்தி தெரியாத பார்வையாளர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று அடிக்கடி கூறிவந்தனர். எனவே, இதனை மாவட்டாட்சியர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, மாவட்டாட்சியர் மற்றும் நூலக இயக்குநர் அவர்கள் தமிழில் வழிகாட்டி நூல் ஒன்று எழுதி அச்சிட அனுமதி வழங்கினார்கள். எனவே, சரசுவதி மகால் நூலகத்திலுள்ள விவரங்களைச் சேகரித்து ஒரு வழிகாட்டி நூலாக எழுதினேன். இது பார்வையாளர்களுக்கு, இந்நூலகத்திலுள்ள அரிய நூல்களைப் பற்றியும் சுவடிகளைப் பற்றியும், இந்நூலக வரலாற்றைப் பற்றியும் அறியப் பெரிதும் பயன்படுமென நம்புகிறேன்.

இதனை மொழிவளப்படுத்த உதவிய டாக்டர் திரு. சி. கோ. தெய்வநாயகம் அவர்களுக்கும், உயர்திரு எஸ். சுயம்பு லிங்கம் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இதனை அச்சிட அனுமதி அளித்த மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர் திரு. மா. இராமு, இ. ஆ. ப., அவர்களுக்கும், நூலக நிருவாக அதிகாரி திரு. சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைச் செவ்வனே அச்சிட்ட ஓம் சக்தி அச்சகத்தாருக்கும், அவ்வப்போது அச்சு நகல்களை ஒத்துப்பார்த்துப் பிழை திருத்தம் செய்ய உதவிய சரசுவதி மகால் நூலகப் பணியாளர்களுக்கும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்,
12—2—88

அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். எஸ்ஸி.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்.

SRI SARFOJI MAHARAJA.

1798 - 1832

சரசுவதி மகால்

வழிகாட்டி நூல்

உலகப் புகழ்பெற்ற அறிவுக் களஞ்சியமாகவும் அரிய பொருட்களஞ்சியமாகவும் கல்விக் கோயிலாகவும் திகழ்ந்து, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வருகின்ற பார்வையாளர்களைக் கவர்ந்துவரும் பெருமை மிக்கது தஞ்சை மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தில் காணப்படும் கலை நுட்ப வேலைப்பாடுகளையும் ஆர்வத்துடன் திரட்டப்பட்ட மதிப்புமிக்க பழம் புத்தகங்களையும் அரிய கையெழுத்துச் சுவடிகளையும் பார்வையாளர்கள் மிகவும் வியந்து போற்றுகின்றனர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள், தாம் விரும்பிய பொருளில் ஆய்வு செய்வதற்கான அறிவுக் கருத்துகளைத் தன்னகத்தே அருமையுறக் கொண்டிருப்பதால் இந்நூலகத்திற்கு வந்தவண்ணம் இருக்கின்றனர். பனையோலைச் சுவடிகளையும், தாள்சுவடிகளையும் பேரளவில் பெற்றுள்ள இப்பெரு நூலகம் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் தனித்திறம் வாய்ந்ததாகத் திகழ்ந்து வருகின்றது. ஆதலால் அறிஞர்கட்கும் பார்வையாளர்கட்கும் இந்நூலகத்தின் தோற்றம், வளர்ச்சி அண்மைக்காலச் சிறப்புகள் முதலியவற்றைத் தெளிவுறுத்துமுகத்தான் இவ்வழிகாட்டி நூல் வெளியிடப்படுகிறது.

இந்தியாவிலிருந்தும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் அறிஞர்கட்குத் தக்கதோர் அறிவு மையமாகவும் உலகின் மிகப்பெரும் சுவடி நூலகமாகவும் இது திகழ்கிறது. இந்நூலகத்தில் தனித்திறமும் அருமையும் நிரம்பிய சுவடிகள் பல, பன்னாட்டு அறிஞர்களும் தமக்கு வேண்டிய மொழி இலக்கிய இன்றியமையாக் குறிப்புகளைச் சேகரித்துக்கொள்ளத் தக்கவையாயுள்ளன. இந்நூலகச் சுவடிகளைப் பட்டியலிட்டதன் பெரும்பங்கு ஆய்வு அறிஞரும் அந்நாளைய மாவட்ட நீதிமன்ற நடுவருமான டாக்டர் ஏ. சி. பர்னல் அவர்களைச் சாரும். மிகவும் பயனுள்ள தனித்திறம் வாய்ந்த அரிய புத்தகங்களும், சுவடிகளும் இந்நூலகத்தில் இருப்பதனை டாக்டர் பூலர் பாராட்டுகிறார். மிகச் செவ்வையாகப் பாதுகாக்கப்பட்டுவரும் அரிய சுவடிகளை, உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த ஆய்வறிஞர்கள் அவ்வப்போது இந்நூலகத்திற்கு வந்து பயன்படுத்திச் செல்கின்றனர்,

மிகச் சிறந்த கலைக்கும், கலாச்சாரத்திற்கும், இலக்கியங்களுக்குமாக ஏறத்தாழ 10 நூற்றாண்டுகளுக்குமேல் பெரும் புகழ்பெற்று விளங்குவது தஞ்சையாகும். தஞ்சையின் தனிப்பெரும் பண்பாட்டிற்கு, அடுத்தடுத்து அமைந்த சோழ, நாயக்க, மராட்டிய மரபுகள் வளம் சேர்த்தன. சோழர்கள் படைத்த கோயில்களும், சிற்பங்களும், ஓவியங்களும் தமிழகத்தின் தனிப்புகழுக்கு உதவின. அவர்களை அடுத்துத் தொடர்ந்த நாயக்கர்கள் இலக்கியத்தையும், நாடகத்தையும், இசைக்கலையினையும் வளர்த்தும் பரப்பியும் வந்தனர். மராட்டியர்களும் அவர்களை அடுத்தோர்களும் அவர்களின் முன்னோர்களின் கலைச்செல்வங்களைப் பாதுகாத்ததோடு வளர்த்தும் வந்தார்கள். மராட்டிய அரசர்களுள் பெரும்பாலோர் நல்ல அறிஞர்களாகவும், சிறந்த எழுத்தாளர்களாகவும் திகழ்ந்தார்கள். அறிவுக் களஞ்சியமாகவும், காலத்தை வென்ற கலைப் பெட்டகமாகவும் விளங்கும் சரசுவதி மகால் நூலகம் சோழ, நாயக்க, மராட்டிய அரசுகளின் ஒருமித்த கண்காணிப்பில் உருவாகியிருக்கிறது. மன்னர் சரபோஜி (1798—1832) தான் இந்நூலகத்தை இன்றைய நிலையில் வளர்த்துச் சிறப்புறச் செய்த பேராளராவர். நூலகத்திற்காகத் தனது கைப்பொருளிலிருந்து நூல்களை வாங்கி நூலகத்தை வளர்ச்சி பெறச் செய்வதற்கு அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. உலகப் புகழ்பெற்ற இந்நூலகத்தில் அவரால் வாங்கப்பட்ட பல்வேறு மொழிகளைச் சார்ந்த அரிய சுவடிகளும், புத்தகங்களும் ஏராளமாக உள்ளன.

பொது நூலகம் என்பதைவிட இது ஒரு ஆய்வு நூலகமாகவே பொலிவுறுகிறது. 1918-ஆம் ஆண்டில் ஒரு இலட்ச ரூபாய் வைப்பு நிதியோடு கூடியதாக இந்நூலகத்தில் காப்புக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் செயற்பாடாக ஐவர் அடங்கிய நிருவாகக்குழு ஒன்று. இவ்வறநிலைய வைப்பு நிதியின் வளர் தொகையினையும் தமிழக அரசாலும், இந்திய அரசாலும் அளிக்கப்படும் மானியங்களையும் பயன்படுத்தி அறிஞர்கட்குப் பயன்படத்தக்க வகையில் சுவடிகளைப் பாதுகாத்தும், அரிய சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்து வெளியிட்டும் நூலகத்தை வளர்ச்சியுறச் செய்தது.

உரிய உண்மைகளை உளங்கொண்ட தமிழக அரசு ஆணை எண். எம். எஸ் 209, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை (கே 1.) நாள் 1—2—83இல் தஞ்சை மன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தினைக் கீழ்க்கண்ட மேலாண்மையாளர்களைக்கொண்ட தமிழ்நாட்டின் பதிவு செயற்பாடு சட்டம் 1975 (சட்டம் 27—1975) சட்டப்படி நூலக இணையமாக மாற்றிக்கொள்ளச் செய்திருக்கிறது.

இணைய மேலாண்மையாளர்கள்

தலைவர் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு.

துணைத்தலைவர் :

செயலாளர், பண்பாட்டுத்துறை, நடுவண் அரசு.

உறுப்பினர்கள் :

இயக்குநர், தேசிய நூலகம், கல்கத்தா.

தலைவர், தேசிய ஆவணக் காப்பகம், புதுடில்லி.

சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், கல்வித்துறை, தமிழ்நாடு அரசு.

மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர், தமிழ்நாடு அரசு.

துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு.

நிதித்துறை ஆலோசகர், பண்பாட்டுத்துறை, நடுவண் அரசு.

இணைச் செயலர், நிதித்துறை, தமிழ்நாடு அரசு.

திருமிகு. P. துளஜேந்திர ராஜா சாகேப் அவர்கள், இளவரசர், தஞ்சாவூர்.

கல்வித்துறைத் துணை ஆலோசகர், பண்பாட்டுத்துறை, நடுவண் அரசு.

உறுப்பினர் மற்றும் செயலர் :

இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சுவடிப் பதிவு

சமஸ்கிருதம், தமிழ், மராத்தி, தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளிலுள்ள ஆயிரக்கணக்கான பனையோலை, தாள் சுவடிகள், இந்நூலகத்திலுள்ள அகன்ற உயரமான மரப்பேழைகளுள் தனித்தனியே வைத்துப் பாதுகாக்கப் பெற்று வருகின்றன. கீழ்க்காணும் பட்டியலில் இச்சுவடிகள் பற்றிய விவரங்களைக் காணலாம்.

	மொழி	ஓலைச்சுவடி	தாள் சுவடி	கூடுதல்
1.	சமஸ்கிருதம்	19,497	18,002	37,499
2.	தமிழ்	3,341	——	3,341
3.	தெலுங்கு	742	41	783
4.	மராத்தி	——	3,062	3,062
5.	ஹிந்தி	——	22	22
			ஆக கூடுதல்	44,707

இச்சுவடிகளின், சுவடி விளக்க அட்டவணைகள் பல ஆய்வறிஞர்கட்கும் வாசகர்கட்கும் பயன்படும் வகையில் இந்நூலகத்திலிருந்து வெளியிடப் படுகின்றன.

இந்நூலகத்தில் இடம்பெற்றிருந்த வடமொழிச் சுவடிகளுக்கு ஆங்கிலேய அரசின் வேண்டுகோளின்படி, தஞ்சையில் செசன்ஸ் நீதிபதியாக இருந்த டாக்டர் ஏ. சி. பர்னல் அவர்கள் கி. பி. 1871—1874 ஆம் ஆண்டுகளில் சுவடிகளைச் சரிபார்த்து, பட்டியல் தயாரித்து, கி. பி. 1880 ஆம் ஆண்டு இலண்டன் மாநகரிலிருந்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டார்.

இதனை அடிப்படையாகக்கொண்டு விளக்க அட்டவணைகளாக 1 முதல் 19 வகையிலான தொகுப்பினை 1924 முதல் 1932 வரை திரு. பி பி. எஸ் சாஸ்திரி அவர்களும், 20 ஆம் தொகுப்பினை 1952இல் திரு. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களும், 21, 22, 23, 24ஆம் தொகுதிகளை இந்நூலக வடமொழிப் பண்டிதர்களும் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் தமிழ், தெலுங்கு, மராத்தி மொழிச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணைகளும் இந்நூலகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. கீழ்க்காணும் பட்டியல், விளக்க அட்டவணைகளின் எண்ணிக்கையினைத் தெளிவுறுத்தும்.

வ. எண்.	மொழி	அட்டவணைகளின் எண்ணிக்கை
1.	சமஸ்கிருதம்	24
2.	தமிழ்	13
3.	மராத்தி	5
4.	தெலுங்கு	2

இந்நூலகத்தில் மேன்மேலும் நூல்களையும், சுவடிகளையும் பெருக்குத லில் மிக்க ஆர்வங்காட்டி வரும் இந்நூலக அலுவலர்களால் பொதுமக்களிட மிருந்து, மிகுதியான புத்தகங்களும், சுவடிகளும் அன்பளிப்பாகப் பெறப்பட்டு வருகின்றன. இத்தகைய அன்பளிப்புகள் வழி அண்மைக்காலத்தில் இந் நூலகம் 4000 புத்தகங்களையும், 200 சுவடிகளையும் பெற்றுள்ளதாதலின் இச்சுவடிகள் குறித்த விளக்க அட்டவணைகளின் தயாரிப்பு வேலையும் மிகுந்து கொண்டே வருகின்றது.

மோடி ஆவணப் பிரிவு

மராட்டிய மன்னர்கள் தமது காலத்திய நாட்குறிப்புகள், கடிதங்கள், கணக்குகள், ஆணைகள், நிகழ்ச்சிக் குறிப்புகள் ஆகியவற்றை 'மோடி' என்னும் ஒருவகை எழுத்துக்களில் எழுதி வைத்தனர். இவ்வெழுத்துக்கள் மராட்டி மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்டன. மராட்டியர்களின் அரசியல் வரலாறு, சமுதாய வாழ்க்கை, பண்பாடு ஆகியவற்றைத் தெரிவிக்கும் அகச்சான்றுகளாக இவை திகழ்கின்றன. இவற்றைப் படித்து மொழிபெயர்ப்போர் மிகச்சிலரே.

சரசுவதி மகால் நூலகத்தில் சுமார் இருநூறு ஆண்டுக்கால மோடி ஆவணக் கட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றை ஆய்வு செய்த வரலாற்று ஆய்வுக்குழு இவற்றை மூன்று பகுதிகளாகப் பிரித்தது. முதலிரண்டு பகுதி களும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் சென்னை ஆவணக் காப்பகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. எஞ்சிய பகுதியிலுள்ள சுமார் 850 மோடி ஆவணக்கட்டுகள் தற்போது பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. இவை மராட்டியர் வரலாற்றினை அறியப் பெரிதும் பயன்படுவதால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தொகுதிகளாக வைக்கப்பட்டுள்ளன.

புத்தகப் பிரிவு

44,965 அச்சுப் புத்தகங்கள் இந்நூலகத்தில் உள்ளன. அவற்றுள் பெரும்பான்மையன கிடைத்தற்கரியனவாம். மன்னர் இரண்டாம் சரபோஜி திரட்டிய 4,298 புத்தகங்களும் இவற்றுள் அடங்கும்.

ஒவ்வொரு மொழியிலும் உள்ள நூல்களின் விவரம்

1.	தமிழ்	9,700
2.	ஆங்கிலம்	10,126
3.	சமஸ்கிருதம்	11,733
4.	தெலுங்கு	1,547

5. மராத்தி	2,178
6. இந்தி	2,752
7. மற்றவை	978

வெளியீடுகள்

இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் அரிய சுவடிகளைப் பதிப்பித்து அச்சு நூலாக்கி மக்கட்குப் பயன்படச் செய்தலேயாகும். அவ்வகையில் இந்திய அரசும் தமிழக அரசும் மானியங்களை அளித்து வருகின்றன. இதுவரையில் 340 புத்தகங்கள் சமஸ்கிருதம், தமிழ், மராத்தி, தெலுங்கு மொழிகளில் சமயம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், நாட்டியம், இசை, மருத்துவம், சோதிடம், மந்திர சாத்திரம், சிற்ப சாத்திரம் முதலிய பொருள்களில் வெளி விடப்பட்டுள்ளன. இந்நூலக ஆட்சிக் குழுவால் கீழ்க்காணும் அறிஞர் பெரு மக்கள் அவர்களது சிறப்புமிக்க துறையில் பதிப்பாசிரியர்களாகவும், சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்களாகவும், மொழி பெயர்ப்பாளர்களாகவும் அமர்த்தப்பட்டு நூல்களைப் பதிப்பித்துள்ளனர்.

பதிப்பாசிரியர்கள் மற்றும்
சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்கள்

1. டாக்டர் எஸ். இராமநாதன், சென்னை.
2. அக்னிஹோத்ரம் திரு. இராமாநுஜ தாதாசாரியார், கும்பகோணம்.
3. டாக்டர் சி. எஸ். வெங்கடேசுவரன், சிதம்பரம்.
4. ஸ்ரீவாஞ்சியம் திரு. கே. இராமச்சந்திர ஐயர், திருவையாறு.
5. திரு. பி. எம். பத்மநாப சர்மா, தஞ்சாவூர்.
6. டாக்டர் அ. மா. பரிமணம், தஞ்சாவூர்.
7. திரு. சி. கோவிந்தராசனார், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
8. திரு. எஸ். கோபாலன்
9. திரு. வீ. சொக்கலிங்கம், தமிழ்ப்பண்டிதர் (முன்னாள்) சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
10. திருமதி. ச. திலகம், தமிழ்ப் பண்டிதர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
11. திரு. ய. மணிகண்டன், தமிழ்ப்பண்டிதர், ,,

12. திரு. டி. ஆர். பீமராவ், மராத்தி பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

13. திரு. என். விசுவநாதன், தெலுங்கு பண்டிதர் (முன்னாள்)
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

14. திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ,,
முதுநிலை வடமொழிப் பண்டிதர்

15. திரு. என். எஸ். தேவநாதச்சாரியார்

16. திரு. என். சீனிவாசன், வடமொழிப் பண்டிதர். ,,

17. திருமதி எஸ். இராஜலட்சுமி, ,, ,,

18. திரு. அ. பஞ்சநாதன், வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் I
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

19. திரு. எம். சீராளன், நூலகர் II, ,,

20. திரு. சுவாமிநாத சாஸ்திரி, தஞ்சாவூர்.

21. திரு. V. V. சுப்ரமணிய சாஸ்திரி

22. திரு. A. சுந்தரேச சிவாச்சாரியார்

23. மருத்துவர் எஸ், அரங்கராசன்

24. திரு. பாவலரேறு ச. பாலசுந்தரம்

25. டாக்டர் சி. கோ. தெய்வநாயகம்

26. திரு. வி. எஸ். வி. குருசாமி சாஸ்திரி

27. திரு. ஏ. கிருஷ்ணசாமி மாடிக்ராவ் சாகேப்

28. திரு. கி. கோதண்டபாணி

29. திரு. சீனிவாச ராகவன்

30. திரு. கே. மருதமுத்து

31. டாக்டர் மீ. அமு. நாசிர் அலி

32. திரு. டி. பி. நாகராஜன்

33. திரு. ஆர். ஜெயராமன்

34. டாக்டர் T. V. வரதராஜன்

35. திருமதி இராஜலட்சுமி

36. டாக்டர் சீதா

37. திரு. ஸ்ரீராம தேசிகன்

38. திரு. வி. சுவாமிநாத ஆத்ரேயர்

39. டாக்டர் A. சண்முகவேலன்
40. டாக்டர் ஜே. வி. சுப்பராயடு
41. திரு. டி. எம். சௌந்தரராஜன்
42. டாக்டர் எம். சௌரிராஜன்
43. டாக்டர் திரு. சாம் டேனியல்
44. டாக்டர் வி. எல். சேதுராமன்
45. மருத்துவர் எஸ். வெங்கட்ராஜன்
46. திரு.G. நாகராஜராவ்
47. திரு. ஜி. சேதுராமன்
48. திரு. பா. சீனிவாசன்
49. திரு. P. D. ஜோஷி
50. திரு. ராம. கோவிந்தசாமி பிள்ளை
51. திரு. வ. வேணுகோபாலன்
52. திரு. எம். சடகோப ராமானுஜம்
53. திரு. T. V. கோபாலய்யர்
54. புலவர் ப. வெ. நாகராசன்
55. திரு. என். வேங்கடரமணி
56. எஸ். கணபதிராவ்
57. திரு. T. S. கங்காதரன்
58. திரு. இராமலிங்கம் பிள்ளை
59. திரு. C. M. இராமச்சந்திர செட்டியார்
60. திரு. முத்துரத்தின முதலியார்
61. திரு. அடிகளாசிரியர்
62. திரு. ஸ்வர்ண காளீச்வரன்
63. திரு. சி. இளங்கோவன்
64. திரு. V. S. இராதாகிருஷ்ண சாஸ்திரி
65. திரு. T. S. அமிர்தலிங்கம்
66. திரு. K. வாசுதேவ சாஸ்திரி
67. டாக்டர் நளினி சந்திரன்
68. டாக்டர் C. ராஜராஜேஸ்வர சர்மா
69. திரு. புலிப்பாணி சுந்தர வரதாச்சாரியார்

70. திரு. V. M. அனந்த நாராயணன்
71. திரு. N. V. V. சாஸ்திரி
72. திரு. T. R. தாமோதரன்
73. திரு. T. V. ராதாகிருஷ்ணசாஸ்திரி
74. திரு. K. E. கோவிந்தன்
75. திரு K. S. சுப்ரமணிய சாஸ்திரி
76. திரு. R. வெங்கடாசாரியார்
77. டாக்டர் V. ராகவன்
78. திரு. கி. வா. ஜகந்நாதன்
79. திரு. N. K. ராமானுஜ தாதாச்சாரியார்
80. திரு. N. வெங்கட்ராவ்

மொழித்துறைகள்

தமிழ், சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு

இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு, மோடி ஆகிய மொழித்துறைகள் இடம்பெற்றுள்ளன. இம்மொழித் துறைகளில் அவ்வம் மொழிப்பண்டிதர்கள் பணிபுரிகின்றனர்.

தொகுப்பில் உள்ள ஓலைச் சுவடிகளுக்கும் சேகரிக்கப்பட்டு வருகின்ற ஓலைச் சுவடிகளுக்கும் சுவடி விளக்க அட்டவணைகள் தயாரித்தல், சுவடிகளுக்குக் கையெழுத்துப் பிரதி உருவாக்குதல், அரிய வெளிவராத நூல்களைப் பதிப்பித்தல், ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டுதல்—துணை செய்தல் முதலிய பணிகளை இம்மொழித் துறைகள் மேற்கொண்டு சுவடியியலுக்கும் மொழிகளுக்கும் வளம்சேர்த்து வருகின்றன.

புத்தகப் பகுதி

இந்த பிரிவில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி முதலிய மொழிப் புத்தகங்கள் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டு வரிசை எண் படி அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. பல மாநிலங்களில் உள்ள பல் கலைக்கழகங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வரும் ஆய்வாளர்களுக்கும் மற்றும் பொது வாசகர்களுக்கும் புத்தகங்கள் கொடுத்து வாங்கப் படுகின்றது.

இங்குள்ள நூல்கள் வெளியில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. தேவைப்படுகின்ற ஆய்வாளர்கள் இங்கேயே இருந்து குறிப்பு எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் நூல்களின் பகுதிகளை இங்கேயே படியெடுத்துக்கொள்ள (ஜெராக்ஸ்) வசதி செய்யப் பட்டுள்ளது.

வாசகர்கள் நூல்களைப் படிப்பதற்கான படிப்பறை ஒன்றும் இங்கு உள்ளது. இப்பிரிவின் பணிகள் இங்குள்ள நூலகர்களால் பகுப்புச் செய்யப் பட்டு முறைப்படுத்தப்பெற்றுச் செயல்பட்டு வருகின்றன.

நுண்படப் பிரிவு (MICRO FILM UNIT)

*1980*ஆம் ஆண்டு முதல் இந்நூலகத்தில் அரும் சுவடிகளை காப்பதற்கென நுண் படம் எடுக்கும் பணி துவங்கப்பெற்று தொடர்ந்து செயல் பட்டும் வருகிறது. காலவெள்ளத்தால் செல்லரித்துப்போகும் நிலையை அடைந்த ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள், பழமையான நூல்கள், அரிய ஓவியங்கள், வரைபடங்கள் போன்றவற்றை மிக நுண்ணிய படங்களாக பிலிம்களில் பதிவு செய்யப்பெற்று பாதுகாக்கப்பெறுகின்றது. இதற்கென நுண்படப் பதிவுக்கருவி, ஒளிப்பட பதிவுக்கருவி, திரையிடும் கருவி, முன்பு பதிவு செய்த பிலிம் சுருள்களை புதிய சுருள்களில் பதிவுசெய்யும் கருவி ஆகியவை இங்குள்ளன. இவற்றின் உதவியால் தேவைப்படும் சுவடிகளையோ, படங்களையோ திரையில் பெரிய அளவில் பார்த்தல், ஒளிப் படங்களைப் பதிவு செய்தல், ஆகிய பணிகளைச் செய்ய இயலுகின்றது. இதனால் இங்கு வரும் ஆய்வாளர்கட்கும் பல ஆய்வு நிறுவனங்களுக்கும் தேவைப்படும் ஒளிப்படச் சுருள்களையும், ஒளிப்படங்களையும் அளிக்க இயலுகின்றது. இந்திய நாட்டு ஆய்வு நிறுவனங்கள் மட்டுமின்றி மேனாட்டுப் பல்கலைக் கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் பயன்பெற முடிகின்றது.

மேலும் புதுதில்லியில் உள்ள இந்திராகாந்தி தேசிய கலை நிறுவனமும், இந்நூலகமும் இணைந்து கலைத்துறைச் சுவடிகள் அனைத்தையும் நுண்படம் எடுக்கும் பணி தற்போது நிகழ்கின்றது. எதிர்காலத்தில் இங்குள்ள எந்தச்சுவடியும் அழியாவண்ணம் பாதுகாக்க இப்பிரிவு மிகவும் பயனுள்ளதாய் அமைந்துள்ளது. இப்பிரிவின் பணிகள் காப்பாளர் (Preserver) ஒருவர் தலைமையில் மேற்கொள்ளப்பெறுகின்றது.

வேதிம காப்புப் பிரிவு (CONSERVATION SECTION)

இந்நூலகத்திலுள்ள ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், அரிய நூல்கள் ஓவியங்கள் மற்றும் ஆவணங்களை அழியாமல் பாதுகாக்கவும் மற்றும் சேதமடைந்த சுவடிகளை செப்பனிடவும் ஒரு வேதிம காப்புப் பிரிவு 1980ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் வேதிமப் பொருட்களைக்கொண்டு பூச்சிகள் வராமல் பாதுகாப்பதோடு மட்டுமின்றி செப்பனிட புகையூட்டல், சிப்பான் மெண்டிங், லேமினேசன் போன்ற புதிய முறைகள் செய்யப்பட்டு வருகின்றன. மற்றும் சுவடிகள், பீரோக்களுக்கு பூச்சிகள் வராமலிருக்க வசம்பு, மிளகு, கிராம்பு, கருஞ்சீரகம், லவங்கப் பட்டை ஆகியவைகளின் பொடியுடன் ஒரு கட்டி சூடம் வைத்து துணியில் கட்டி சிறு சிறு முடிச்சுகளாக வைக்கப்படுகிறது. இது ஆறு மாதங்களுக்கு மிகுந்த பயனை அளிக்கிறது. மற்றும் ஓலைச் சுவடிகள் உடையாமலும், பூச்சிகள் வராமலும் பாதுகாக்க சிட்ரனில்லா எண்ணெய் பூசி பாதுகாக்கப்படுகிறது. இப்பிரிவின் பணிகள் அனைத்தும் வேதிமக் காப்பாளர் (Chemical Conservator) ஒருவரின் தலைமையில் முறைப் படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

நூலக அச்சகம் மற்றும் நூற்கட்டமைப்புப் பிரிவு

சரசுவதி மகால் நூலக வெளியீடுகளில் பல இங்குள்ள நூலக அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு நூல் வடிவம் பெறுகின்றன,

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், மராட்டி முதலிய மொழிகளிலான நூல்களை அச்சிடத் தேவையான தமிழ், ஆங்கிலம், தேவநாகரி வரிவடிவ எழுத்துகள் நூலக அச்சகத்தில் இடம் பெற்றுள்ளன. இம்மொழிகளிலான நூல்களை அச்சாக்குதற்குத் தகுந்த வரிவடிவங்களில் பயிற்சி பெற்ற அச்சுக்கோப்பாளர்களும் அச்சுப் பொறியை இயக்குபவரும் இங்குப் பணி புரிகின்றனர்.

இங்குள்ள நூற்கட்டமைப்புப் (Binding) பிரிவில் இந்நூலக அச்சகத் தில் அச்சிடப்படும் நூல்கள் செம்மையுறக் கட்டமைப்பு செய்யப்பெற்று நூல் வடிவம் பெறுகின்றன.

மேலும் இங்குள்ள அரிய பழைய நூல்கள் அருமையாக இங்குக் கட்டமைப்புச் செய்யப் பெற்றுப் பாதுகாக்கப்படுகின்றன.

புத்தக விற்பனைப் பிரிவு

ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன் படும் வண்ணம், சரசுவதி மகால் நூலக வெளியீடுகளான தமிழ், மராத்தி, சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளைச் சேர்ந்த இலக்கண, இலக்கிய, மருத்துவ, சோதிட நூல்கள் இங்கு விற்பனை செய்யப்பெறுகின்றன.

புத்தக விற்பனையில் எல்லோருக்கும் ரூ. 10 முதல் ரூ. 50 வரை 10 விழுக்காடு கழிவும், ரூ. 50-க்குமேல் ரூ. 200 வரை 20 விழுக்காடு கழிவும், ரூ. 200-க்குமேல் 30 விழுக்காடு கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 30 விழுக்காடு கழிவும் இங்கு தரப்படுகின்றது. இலவச விலைப்பட்டியல் விரும்புபவர் நிர்வாக அலுவலரிடம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

நடுவண் அரசு, மாநில அரசின் நிதியுதவி

இந்நூலகத்தின் நிருவாகம், பாதுகாப்பு, நூல் வெளியீடு முதலியவற்றிற்கும் துணைப்பொருள் இயந்திரங்கள் வாங்குவதற்கும் உரிய வகையில் நடுவண் அரசும் தமிழக அரசும் தாராளமாகப் பொருளுதவி செய்து வருகின்றன.

அருங்காட்சியகம்

அரிய பழைய ஓலைச்சுவடிகளையும், காகித சுவடிகளையும், நூல்களையும் தன்னகத்தே கொண்டு தனிப்பெரும் புகழுடன் விளங்கும் சரசுவதி மகால் நூலகத்தில் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் ஈர்க்கும் வகையில் அருங்காட்சியகம் ஒன்று இடம் பெற்றுள்ளது. நாள்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் இதனைக் கண்டு களித்துச் செல்கின்றனர். சரசுவதி மகால் சனி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் செயல்படுவதால் பொதுமக்கள் தங்கள் ஓய்வு நாள்களில் இதனைக்கண்டு இன்புற முடிகின்றது. சரசுவதி மகால் நூலகத்தின் வார விடுமுறை நாளான புதன்கிழமையில்கூடப் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்த அருங்காட்சியகம் திறந்து வைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனைப் பார்வையிடுவதற்குக் கட்டணம் எதுவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள முக்கியமானவற்றைப் பற்றிக் கீழே விளக்கம் தரப்படுகின்றது.

சரசுவதி தேவி

கல்விக்குத் தெய்வமான சரசுவதிதேவியின் வண்ணப்படம் ஒன்று நூலகத்தே உள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில் வரையப்பட்டதாக நம்பப்படும் அச்சித்திரம் தஞ்சை மரபில் வரையப்பட்டது எனக் கருதப் படுகிறது. அச்சித்திரத்தில் தேவியார் தண்டுகள் வைக்கப்பட்ட ஆசனத் தில் வீணையைக் கையில் மீட்டும் பாவத்துடன் அமர்ந்துள்ளார். அவரது வலக்கரத்தில் ஜபமாலையையும், இடக்கரத்தில் சிலசுவடிகளையும் வைத்துள் ளார். பெருமிதத்துடன் கூடிய புன்னகை ததும்பிய அந்தமுகம் பார்க்கும் அனைவரையும் களிப்படையச் செய்யும். சொல்லுக்குத் தெய்வமான சரசுவதியைச் சக்தி எனவும் பிரம்மாவின் துணைவி என்றும் கொள்வர்.

ஆதி சங்கரர்

இப்படத்தில் ஆதிசங்கரர் தன்னுடைய சின்முத்திரையுடன் தாமரை மலர்ப்பீடத்தில் வீற்றிருந்து தன்னுடைய நான்கு சீடர்களுக்கும் உபதேசம் செய்கிறார், அவர்கள் பின்னர் துவாரகா, பூரி, சிருங்கேரி மற்றும் பத்ரிநாத் ஆகிய இடங்களில் ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட மடங்களில் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

சமர்த்த இராமதாசர்

சமர்த்த இராமதாசர் அவர்களைச் சித்திரிக்கின்ற ஓவியமும் தஞ்சை மரபில் வரையப்பட்டதாகும். இவர் மகாராட்டிர மாமன்னன் சிவாஜிக்கும் அவருடைய மரபினருக்கும் குருவாகத் திகழ்ந்தவர். இவர் தாசபோதம் என்ற நூலுக்கு ஆசிரியர் ஆவார். அந்த நூலும் நூலகத்தின் காட்சியகத்தே வைக்கப்பட்டுள்ளது. புலித்தோலை இடது கரத்திலும், ஜபமாலையை வலது கரத்திலும், பூமியைப் பார்த்தவண்ணம் பிடித்துள்ளதுபோல் தோற்ற மளிக்கிறார். கருமையான தாடியும், அடிவயிற்றில் கௌபீனமும் உள்ள அவருடைய கட்டுமத்தான உடல்தோற்றம் அனைவரையும் கவரக்கூடியது ஆகும்.

சரபோஜி மகாராஜா II (1798-1852)

சரபோஜி மன்னர் இரண்டாம் துளஜாவின் வளர்ப்பு மகனாவார். தஞ்சையில் சரசுவதி மகால் நூலகம் தோன்றி வளர்ச்சி அடைந்ததற்கு இவர் மிக முக்கியமானவராவார். இவர் வாரணாசியிலிருந்து பலவகைப்பட்ட நூல்களையும் இதர வேலைப்பாடு நிறைந்த பொருட்களையும் சேகரித்து இந்நூலகத்திற்கு அர்ப்பணித்தார்.

பல அறிஞர் பெருமக்களுக்கு வழிகாட்டியாகவும், ஆதரவாளராகவும் விளங்கியவர். இவர் பெயருக்கு மட்டும் மன்னராக விளங்கி ஆட்சியாளர்க்கு உரிய அரசியல் சித்தாந்தத்திலிருந்து வேறுபட்டு தமது முழு நேரத்தையும் கலாச்சாரத்தை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி அரசவையைக் கல்விக்கூடமாக ஆக்கியவர். இவர் ஸ்வார்ட்ஸ் என்ற கிறித்துவ பாதிரியாருடன் கூடிய தொடர்பினால் மேற்கத்திய கலை மற்றும், கல்வியில் ஆர்வம் காட்டி அதனை முழுமையாகப் பயின்றார். அவருக்குத் தஞ்சை தேவாலயத்தில் பளிங்கினாலான வியத்தகு நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவினார். சரபோசி மன்னர் ஆங்கிலத்தைத் தெளிவுற எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டு பல மொழிகளில் வெளியான சுவடிகளையும், பிரதிகளையும் அச்சடிக்கப்பட்ட நூல்களையும் தன்னுடைய சொந்த சேகரிப்புகளுடன் இந்நூலகத்தே சேர்த்து அதை மிகவும் விரிவுபடுத்தினார். அவர் அவ்வாறு இலக்கியம், வேதாந்தம், இலக்கணம், காப்பியம், இசை, நாடகம், நடனம் கட்டிடக்கலை, மருத்துவம், சோதிடம் சம்பந்தப்பட்ட பல நூல்களைச் சேகரித்தார்.

சாளுவ நாயக்கன் பட்டினத்திலுள்ள எட்டு அடுக்குகளுடன் கூடிய மனோரா என்னும் அழகிய கோபுரம் அவரது கலையார்வத்தை அறிவிக்கின்ற நினைவுச் சின்னமாகும். நெப்போலிய மாமன்னனை வென்றதற்காக, ஆங்கிலேயர்க்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இக்கோபுரம் எழுப்பப் பட்டது.

1826-ல் தஞ்சையில் பிஷப் ஹீபர் இவரைச் சந்தித்துச் சிலகாலம் இவருடன் கழித்தார். சரபோசியின் அறிவாற்றலைக் கண்டு வியந்து 'நான் பல முடிசூடியவர்களைப் பார்த்ததுண்டு. ஆனால் இம்மாதிரியான ஆற்றலுடன் கூடிய மன்னனைக் கண்டதில்லை' என்று கூறியுள்ளார். இம்மாதிரியே இந்நூலகத்தைக் கண்டவர்கள் அனைவரும் இவருடைய அறிவாற்றலுடன் கூடிய செய்கைகளையும், கல்வி அறிவையும் கண்டு மிகவும் கவரப்பட்டார்கள்.

மூலிகைகளின் படவிளக்கத் தொகுப்பு

இரண்டாம் சரபோசி தஞ்சையில் தன்வந்தரி மகால் என்ற நிறுவனத்தையும் நடத்தி வந்தார். இங்கே அவர் தலைசிறந்த மருத்துவர்களை ஒன்று சேர்த்து ஆயுர்வேதம், யுனானி, அலோபதி மற்றும் சித்த மருத்துவம் மற்றும் மருந்துகள் பற்றி தீவிர ஆராய்ச்சி செய்து அதன் கண்டுபிடிப்புகளை 18 புத்தகங்களாக உருவெடுக்க ஆவன அனைத்தும் செய்தார். மூலிகைத் தாவரங்களைப் பற்றிய விவரங்களை அவற்றின் இயற்கை வண்ணங்களுடன் வரைந்து பிரதி ஒன்றை தயாரித்து அதன்

மூலம் மூலிகை தாவரங்களைப் பற்றி அனைவரும் அறிய சரசுவதி மகாலில் வைத்தார்.

டேனியலின் வண்ண ஓவியங்கள்

இரண்டாம் சரபோசி ஓவியக்கலையில் மிகுந்த திறனாய்வு மிக்கவர். புராதனமான 80 வண்ணப்படங்களின் சேகரிப்புகள் இங்குப் பாதுகாக்கப் படுகின்றன. அவைகள் தொன்மை வாய்ந்த இந்திய மற்றும் இங்கிலாந்து நகரங்களையும், திருச்சி மலைக்கோட்டை, மதுரை அரண்மனை புள்ளி யில் உள்ள ஜும்மா மசூதி முதலியவற்றை அவற்றின் பழமையுடன் நமக்கு நினைவூட்டுகின்றன. நாம் அப்படங்களைக் கண்ட மாத்திரத்திலேயே அக் காலத்திற்குச் சென்று விட்டது போல் ஓர் உணர்வும் பிரமிப்பும் நமக்கு ஏற்படுகின்றது. அவைகள் புகழ் பெற்ற டேனியல் மற்றும் ப்ரேசர் என்பார்களால் வரையப்பட்டு 18, 19-ம் நூற்றாண்டுகளில் லண்டனில் புகைப்படங்களாக்கப்பட்டன.

சரபோஜி மன்னரின் சேகரிப்புகள் (மருத்துவ நூல்கள்)

சரபோசி மன்னரால் சேகரிக்கப்பட்ட மருத்துவ நூல்கள் காட்சிப் பெட்டகத்தில் பார்வைக்காக வைககப்பட்டுள்ளன. அவைகள் 18-ஆம் நூற்றாண்டில் லண்டனில் அச்சடிக்கப்பட்டவை. மனிதனின் உடல்கூறு பற்றிய நூல் தற்போதைய உடல்கூறு பற்றிய நிபுணர்களுக்கு ஓர் அடிப் படையான முன்மாதிரியாகத் திகழ்கிறது. நூலகப் பதிவேட்டை நாம் பார்க்கும்போது அது IIஆம் சரபோஜியின் பலதரப்பட்ட கலைகளின் ஆர்வத்தை நமக்குப் புலப்படுத்தும். அவ்விடமுள்ள நூல்கள் மிகவும் அரிதானதுடன் விலைமதிப்புள்ளதும் ஆசியா மற்றும் அமெரிக்கக் கண்டங் களில் மிகவும் புகழ் வாய்ந்ததுமாகும். அவைகள் அனைத்திலும் சரபோசி மன்னரின் தெளிவான கையெழுத்துக்களில் அந்நூலைப்பற்றிய குறிப்புகள் எழுதியிருக்கும். ஏறத்தாழ அனைத்து நூல்களிலும் ஒவ்வொரு பக்கத்தின் ஓரத்திலும் மன்னரின் கையால் எழுதப்பட்ட இக்குறிப்புகளை ஆங்காங்கே காணலாம். இது மன்னரின் ஆழமான அறிவாற்றலையும் தெளிவான சிந்தனையையும் நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

பஞ்சபட்சி சாஸ்திரம்

இது நூலகத்தில் உள்ள சிறிய ஓலைச் சுவடிகளில் ஒன்றாகும். கைக்கு அடக்கமாக உள்ள இந்த ஓலைச்சுவடியில் சோதிடங்களைப்பற்றி ஐந்து பறவைகள் சொல்வதுபோல் எழுதப்பட்டுள்ளது. தற்காலத்தில் சோதிடம் வான இயலாகக் கருதப்படுகிறது.

பகவத்கீதை

இது சமஸ்கிருத மொழியில் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட ஒரு கையடக்கமுள்ள காகிதச் சுவடியாகும். இந்து சமயத்தில் பகவத்கீதை மிகவும் பிரபலமான நடைமுறை வேதநூல் ஆகும். மற்ற இரண்டு வேத நூல்கள் உபநிடதம், பிரம்மசூத்திரம் ஆகும். ஆனால் பகவத்கீதையைப் போல எளிந்துவரப் பெற்றவை அல்ல. இதன் எளிய தன்மையால் மக்களிடையே வெகுவாகப் போற்றப்பட்டு வருகிறது.

வால்மீகி இராமாயணம்

இது 24,000 சுலோகங்களுடன் கூடியதாகும். இது பழங்காலத்து எழுத்தாளர்கள் அறிவையும், எழுத்துத் திறமையையும் நன்கு வெளிப் படுத்துகிறது. ஒவ்வொரு பனையோலைச் சுவடியும் 3"×9" அளவுள்ளது. இந்தச் சுவடியின் இரு பக்கங்களிலும் 30 வரிகள் கிரந்த எழுத்துக்களில் சிறியதாக எழுதப்பட்டிருக்கிறது. இவற்றை வெறுங்கண்களால் படிப்பது இயலாது.

கம்பராமாயணம்

கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படும் கம்பரால் இயற்றப்பெற்ற "இராமாவதாரம்", கம்பராமாயணம் என்றும் பெயருடன் புகழ்பெற்று விளங்குகின்ற தமிழ்க் காப்பியமாகும். இக்காப்பிய நூல் எழுதப்பெற்ற, பெரிய அளவிலான, பழமையான பனையோலைச் சுவடியொன்று அருங்காட்சி யகக் கண்ணாடிப் பேழையில் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளது. இச்சுவடியின் அளவு 19×11×1½. கம்பராமாயணத்தின் ஆறு காண்டங்களும் மற்றும் உத்தரகாண்டமும் இச்சுவடியில் 531 ஏடுகளில் எழுதப்பட்டிருக்கின்றன.

திருவாய்மொழி வாசகமாலை

இது மணிப்பிரவாள நடையில் பனை ஓலைச்சுவடியில் எழுதப்பட்டு 'கோனேரி தாஸ்யை'யின் விரிவுரையுடன் கூடியது. இது ஓர் அரிய விரிவுரை. திருவரங்கநாதப் பெருமான் இலக்குமி தேவியாருடன் பாம்பணையில் வீற்றிருக்கும் தோற்றத்துடன் கூடிய சித்திரம் அதன் மேல் வரையப்பட் டுள்ளது. இம்மாதிரியான வேலைப்பாடுடைய சுவடி சரசுவதி மகாலைப் தவிர வேறெங்கும் காண முடியாது. இந்நூலைச் சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ளது.

பாமதி

இச்சுவடி கி. பி. 1468-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட நூலாகும். இது சங்கரருடைய அத்வைதத்தின் பாஷ்யத்தைப் பற்றிய விளக்கமாகும். இதன் காகிதங்கள் நேர்த்தியாக உள்ளன. வாசஸ்பதிமித்ரா, தான் அந்நூலை எழுதுவதற்குப் பெரிதும் துணைபுரிந்த தனது மனைவியின் பெயரான பாமதியை அந்நூலுக்குச் சூட்டினார். இந்நூலை அவர் திருமணமான வுடன் தொடங்கினார். அவர் நூலை முடிக்கும்போது அவருடைய மனைவி இளமை முடிந்த நிலையில் இருந்தார். கணவனிடம் பேறுவேண்டி பேறில்லா நிலையை விளக்கி வருந்தினார், இந்நூலாசிரியர் அந்த அம்மை யின் நிலையை அகங்கொண்டு அவளது பெருந்தன்மையை பெரிதும் பாராட்டி அவள் பெயரை அந்நூலுக்குச் சூட்டி, அந்நூலைப் பயில்வோர் களெல்லாம் தம் குழந்தைகள் எனப் பூரிப்புடன் போற்றியதாக வரலாறு கூறுகின்றது.

தத்துவ சிந்தாமணி

வங்காள நடையில் சமஸ்கிருதத்தில் விசேஷமான காகிதமொன்றில் எழுதப்பட்டது. இது பனையோலையின் தோற்றத்தை ஒத்தது.

பர்மிய எழுத்து ஓலைச்சுவடி

இது பௌத்தம் பற்றிய பர்மிய எழுத்துக்களில் எழுதப்பட்ட பாலி மொழி மறையாகும்.

பலவதி

இது மிகப் பழைமையான பனை ஓலைச்சுவடிகளில் ஒன்றாகும் ஜைமினி முனிவர் பூர்வ மீமாம்சத்தின் அடிப்படைத் தத்துவத்தைச் செவ்வனே வகுத்துச் சித்திர வடிவில் அதை 12 பாகங்களில் விவரிக்கின்றார். மீமாம்சா இந்தியத் தத்துவத்தின் ஆறு முறைகளிலும் (சாங்கியம், நியாயம் வைசேசிகா, மீமாம்சா, யோகம், வேதாந்தம்) முக்கியப் பங்கு வகிப்பதுடன் தொன்மையான புனித இலக்கியங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மீமாம்சம் என்பது மனித வாழ்க்கை விளக்கத்தையும் அதில் ஊடாடும் சிக்கல்களையும் தீர்வுகண்டு உண்மை யாதென ஆராயும் வழிக்கு வழி வகுத்து நிற்பதற்கு அளிக்கும் விளக்கமாகும்.

சரபோஜியின் மருந்துக் குளிகைகள் (கி. பி. 1812)

கங்க சுந்தரம், சிந்தாமணி, ராசபூபதி, பஞ்சாமிர்த ரார்பாடி என்ற பெயர் கொண்ட மருந்துகள் மாத்திரை வடிவில் கி. பி. 1812-ஆம் ஆண்டு இரண்டாம். சரபோஜியால் நடத்தப்பட்ட மருத்துவப்பகுதி ஒன்றில் தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாத்திரையிலும் மாத்திரையின் பெயர் ஒரு பக்கத்திலும் அது தயாரிக்கப்பட்ட வருடம் மறு பக்கத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. இவைகள் காலத்தினால் எவ்வித மாறுதல்களையும் அடையாத சிறப்புத்தன்மையைப் பெற்றிருக்கின்றன.

சித்திர இராமாயணம்

சித்திரத் தொடர் மூலம் கதை சொல்லும் முறை அக்காலத்திலேயே வெற்றிகரமாக வகுக்கப்பட்டுள்ளது. இராமாயணத்தின் பால, அயோத்தியா மற்றும் ஆரணிய காண்டங்கள் அழகிய சிறு ஓவியங்கள் மூலம் அழகாக விளக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் மராட்டியர் காலத்தைச் சேர்ந்தவை. (1676—1855) ஒவ்வொரு படத்திற்கும் விளக்கம் தெலுங்கில் கொடுக்கப்பட்டுள்ளது. படங்கள் தென்னிந்திய மரபிலும், சாயலிலும் வரையப்பட்டுள்ளன. இவை தென்னிந்தியாவிற்கும் இந்து மதத்திற்கும் மிகவும் அரியவை. பொதுவாக மொகலாய மரபு ஓவியங்களே இம்மாதிரி வரையப்பட்டிருக்கும்.

கங்கையின் நீராடும் துறைகள் 64

இது இரண்டாம் சரபோஜி காசிக்கு யாத்திரை சென்றபோது வரையப்பட்ட படமாகும். கங்கையாற்றில் படகில் செல்லும்போது குளிக்கும் துறைகள் எப்படி இருந்தனவோ அப்படியே வரையப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் நீளம் ஏறக்குறைய 40 அடி ஆகும். இம்மாதிரி நீளமான வரைபடங்கள் இந்தியாவின் அரிய பொக்கிஷங்களுள் ஒன்று ஆகும்.

சார்லஸ்-லீ-புருன்ஸின் மனித விலங்கு ஒப்புமைப் படங்கள்

பிரெஞ்சு தேச 14-ஆம் லூயியின் அரசவையில் இருந்த சார்லஸ்-லி-புருன்ஸ் என்பவர் வரைந்த மனித முகத் தோற்றத்தை விளக்கும் படங்கள் இவ்விடம் சேகரிக்கப்பட்டுள்ளன, பல்வேறுபட்ட மனித முகங்களை அதனுடன் ஒத்த பறவை மற்றும் விலங்குகளுடன் ஒப்பிட்டு அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மனிதனுடைய கண்கள், மூக்கு, தாடைவடிவம் மற்றும் நெற்றி இவைகளின் தோற்றம் பறவை மற்றும் மிருகங்களின் உறுப்புகளோடு மிகவும் தெளிவாக ஒப்பிட்டு வரையப்பட்டுள்ளது

விஞ்ஞான அடிப்படையிலும் கலைநுட்ப அடிப்படையிலும் இது நூலகத்திற்கு வருபவர்களை மிகவும் கவர்கிறது. இப்படங்கள் மிருகங்கள் பறவைகளை ஒத்த வடிவம் கொண்ட கண்கள் மூக்குகள் கொண்டவர்களின் குணங்களை விளக்கும் நோக்குடன் வரையப்பட்டுள்ளன.

கஜ சாஸ்திரம்

இது, யானைகளின் படங்கள் மிகவும் உயிரோட்டமுள்ள வண்ணத்தில் (விளக்கங்களுடன்) வரையப்பட்ட தொகுப்பு நூலாகும். இவை மராட்டியர் காலத்தில் இரண்டாம் சரபோஜி ஆட்சிக் காலத்தில் வரையப்பட்டவை. யானையைப் பற்றிய விளக்கங்களை பாலகாப்பிய முனி என்பவர் இதர சான்றுகளுடன் சமஸ்கிருதத்திலும் மராத்தியிலும் இந் நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் சொல்லியிருக்கிறார்.

பிரம்மனின் நல்லாசியினால் பிறவியிலேயே மருத்துவ இயலின் பால காப்பியர் தலைசிறந்து விளங்கினார். யானைகளுடன் பல வருடங்கள் வாழ்ந்து அவைகளின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்தவர் அவர். அதன் விளைவாக அவர் இந்நூலுக்கு ஆசிரியராகி நல்ல முறையில் செவ்வனே எழுத முடிந்தது. இந்த நூலகமும் சில வண்ண ஓவியங்களுடன் இந்நூலை வெளியிடுள்ளது. அதில் இறக்கையுடன் கூடிய யானைகளும் சித்திரிக்கப் பட்டுள்ளன.

அசுவ சாஸ்திரம்

இது குதிரைகளின் படங்களை வண்ணத்தில் கொண்டுள்ள ஒரு விரிவான தொகுப்பு. இதன் ஆசிரியர் நகுலர் என்பவர். பின்னர் சாலிஹோத்ரா, சுச்ருதா, கார்கா, ஆர்யா போன்ற ஆசிரியர்களால் மேலும் எடுத்தெழுதப்பட்ட நூலாகும். குதிரைகளின் படங்களும், அதை வரைய உபயோகிக்கப்பட்ட வண்ணங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். குதிரைகள் பொதுவாக போர்களுக்குப் பயன்படக் கூடியவை. அவைகள் பயமற்றவை, வலுவுள்ளவை, எங்கும் செல்லக்கூடியவை. சவாரி செய்பவரின் எண்ணத்தையும், திட்டத்தையும், ஆவலையும் புரிந்து கொள்ளக் கூடியவை. சுற்றுப்புறத்தையும் உடன் புரிந்து கொள்பவை. குதிரைகள் எல்லாக் காலத்திற்கும் ஏற்றவை. பல நாள்களுக்கு மாதங்களுக்கு உணவின்றிச் செயல்படும் தன்மையுடையவை. இதனால் இதில் சவாரி செய்வோரால் காலத்தையும் பசியையும் மறந்து செவ்வனே செயல்பட முடிகிறது.

பறவைகளைப் பற்றிய நூல்கள் (வல்லூறு)

இப்புத்தகம் பல்வேறுபட்ட பறவைகளின் தோற்றத்தை அதற்குரிய வண்ணத்தில் சித்திரிக்கப்பட்ட படங்களுடன் கூடியது. அவைகளுள் இரண்டாம் சரபோஜி மன்னரின் வல்லூறு பறவையும் ஒன்றாகும், அது புஜங்கராவ், ஹரிராவ் ஆகியோர் ஐதராபாத் சென்றிருந்தபோது உதயகிரி நவாபினால் மன்னருக்குப் பரிசளிக்கப்பட்டது. இரண்டாம் சரபோஜி மன்னர் குதிரைகளைப் பற்றியும் புலிவேட்டையாடுதல் பற்றியும் நன்கு அறிந்தவர். அவர் பாஜினாமா என்ற பறவைகளின் நோய்க்கான மருத்துவப் புத்தகத்தினை உருது மொழியிலும், அதனுடைய மராத்திய தழுவலையும் உடன் வைத்திருந்தார்.

பகவான் வேதா

இது நான்கு வேதங்களையும் ஒரே புத்தகத்தில் சுவாமி கங்கேஸ்வரா நந்தா என்பவரால் எழுதப்பட்டு இந்திய மற்றும் வெளிநாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட நூலாகும். சரசுவதி மகாலுக்கும் இந்நூல் அண்மையில் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

கல்லெழுத்தில் பொறிக்கப்பட்ட நூல்கள்

அச்சுக்கலை தமிழர்கள் பழங்காலத்தில் அறியாத ஒன்றாகும். தென் இந்தியாவில் தேவநாகரி எழுத்தில் முதல் அச்சகம் 1805-இல் தஞ்சாவூரில் இரண்டாம் சரபோஜி மன்னரால் ஜெர்மானிய பாதிரியார் ஸ்வார்ட்ஸ் என்பவரின் அறிவுரையில் தொடங்கப்பட்டது. அந்நேரத்தில் சமஸ்கிருதத்திலும், மராத்திய மொழியிலும் ஆதாரக் கல்விக்கான பல புத்தகங்களை அச்சிடுவதே அவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது. தேவநாகரி அச்சுக் கோப்புகள் கொண்ட கையால் இயக்கும் அச்சு இயந்திரம் சென்னையிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனுடைய சிறிய அலுவலகம் நவவித்யா கலாநிதி சாலா என்றழைக்கப்பட்டது. திரு குப்பப்பட்டர். இதன் கண்காணிப்பாளராக இருந்தார் எனச் சொல்லப்படுகிறது. இதில் அச்சடிக்கப்பட்ட முதல் நூல் சமஸ்கிருத மராத்திய பஞ்சாங்க நூல்களாகும். இவை பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வெளியிடப்பட்டன. 19 சர்க்கங்களுடன் கூடிய இரகுவம்ச நூல்களும் 1808-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இதுவே மிகப் பழமையான பதிப்பாகும். மேகமாலை, குமாரசம்பவம் மற்றும் அன்ன பாட்டியம் போன்ற நூல்களும் தேவநாகரி எழுத்தில் அச்சிடப்பட்டன. இவை தஞ்சை மக்களின் கலை நுட்பத்தையும், திறமையையும் வெளிப்படுத்துகின்றன.

பிரபோத சந்திரோதயம்

இந்தக் காகிதச்சுவடி பிரபோத சந்திரோதயம் என்ற சமஸ்கிருத நாடகத்தில் வரும் பாத்திரங்களின் வண்ணப்படங்களைக் கொண்டது.

செப்புப் பட்டயங்கள்

ஐந்து செப்புப் பட்டயங்கள் நூலகத்தே உள்ள காட்சிப்பெட்டியில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அதில் நான்கு பட்டயங்கள் மராட்டி மொழி மற்றும் மோடி வடிவத்திலும், மற்ற ஒன்று தமிழிலும் உள்ளது. அவைகளில் மிகவும் சுருக்கமாக அரசு ஆணைகளைப் பற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் சில வகைச் சுருக்கெழுத்து முறையும் கையாளப்பட்டுள்ளது. அவைகள் வெவ்வேறு மகால்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட அரசு ஆணைகளின் உண்மை நகல்களாகும். அவைகள் நகல்களாக இருப்பதால் அரசு முத்திரைக் குறியிடம் காலியாக உள்ளது. அந்த அலுவலர்கள் அந்த அரசாணைகளின் நகல்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டு மூலப் பிரதியை அரசுக்கே திருப்பி அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. உண்மை நகல் என்று சான்றளித்த அலுவலர்களின் கையொப்பமும் அவர்களுடைய பணியின் பெயரும் ஒவ்வொரு ஆணைக்கும் கீழும் இடப்பட்டுள்ளது. முதல் செப்புப் பட்டயம், அரசரின் சொந்த எழுத்தாளர் கும்பகோணத்தில் நேரில் ஆய்வு செய்து அரசருக்குச் சமர்ப்பித்த அறிக்கையாகும். அடுத்த பட்டயம் நாள் ஒன்றுக்கு ஏழு பணம் என்ற அரசு அங்கீகாரத்தின் நகலைக்கொண்டது. அதில் நாலு பணம் சத்திரத்திற்கும், மூன்று பணம் திருச்சிராப்பள்ளி சத்திரத்திற்கும் அரண்மனையிலிருந்து கொடுப்பதாக உள்ளது. அடுத்த பட்டயம் திருவாரூரில் உள்ள அதிகாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பணம் பிரும்மானந்த பைராகிக்கும் கிக்காங்கிரஸ் பைராகிக்கும் அளிப்பதற்கான அரசின் ஆணையைக் கொண்டது. அதற்கு அடுத்தது மன்னார்குடி மகாலுக்கு ஜூன் 3-ஆம் தேதி 1741-ஆம் ஆண்டு எழுதப் பட்டதாகும். அதில் அரசு நிதியிலிருந்து நாள் ஒன்றுக்கு 10 பணம் நோய் வாய்ப்பட்டவர்களுக்கு உணவுச் செலவுக்காக பிருமானந்த பைராகிக்குக் கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கடைசிப் பட்டயம் 1744-ஆம் ஆண்டு அரசரால் தஞ்சாவூர் சங்கம் கோட்டை மகாலில் உள்ள அதிகாரி களை அதே பிருமானந்த பைராகிக்கு நாள் ஒன்றுக்கு 5 பணம் வீதம் அரண்மனை நிதியிலிருந்து கொடுக்குமாறு இடப்பட்ட உத்தரவாகும். இந்தச் செப்புப் பட்டயங்கள் பிரதாபசிங் மற்றும் இரண்டாம் ஏகோஜி காலத்தில் எழுதப்பட்டன.

கண் மருத்துவமனை

இது 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மருத்துவ இயலைப் பற்றி அறிந்து கொள்ள அரசு மேற்கொண்ட பணியாகும். கண்நோய் மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட பதிவுகள் இரண்டாம் சரபோஜியால் நடத்தப்பட்ட மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருந்தன அவைகள் கண் நோயைப்பற்றியும் அவற்றைக் குணமாக்கும் முறையைப்பற்றியும் விரமாக எடுத்துக் கூறும் அகராதிபோல் உள்ளன. தற்காலத்தில் உள்ள எக்ஸ்ரே படங்களுக்குப் பதில் கண்களைப் பற்றிய விரிவான படமும் அதில் தோன்றும் நோய்களும் அழகாக இதன் உண்மையான வண்ணத்தில் அப்போது வரையப்பட்டிருக்கிறது. நோயாளியின் பெயர், வயது, மருத்துவ மனையில் சேர்ந்த நாள், மருத்துவக் குறிப்பு, மருத்துவ மனையிலிருந்து வெளியேறிய நாள் ஆகியன மருத்துவ அதிகாரியின் கையெழுத்துடன் நோயாளிக்குரிய சீட்டில் விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன. இவை இக் காலத்தில் உள்ள முறைகளைப்போலவே அப்போதும் இருந்திருக்கின்றன. சரபோஜி மன்னர் மருத்துவ ஆய்வகம் ஒன்றைத் தன்வந்திரி மகால் என்ற பெயரில் நடத்திவந்தார். பல்வகை நோய் தீர்க்கும் முறை பற்றிய ஆராய்ச்சிக்கும், புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், நீரிழிவுநோய் மற்றும் காசநோய் பற்றிய ஆய்வுகள், ஆயுர்வேதம் மற்றும் சித்த வைத்திய முறையில் ஆய்வு செய்யப்பட்டன. மருத்துவ நிபுணர்களுக்கு வீடு, நிலம் முதலியன கொடுத்து ஆதரவளித்தும், மருத்துவ நூல்களைப் பணம் அணிகலன்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைக் கொடுத்து வாங்கி யும் சரபோஜி மன்னர் தன்வந்திரி மகாலில் மருத்துவ ஆராய்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தார். இங்குப் புகழ் வாய்ந்த சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவர்களை ஒன்று சேர்த்துப் பல கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவளித்தார். இதன் விளைவாக ஏற்பட்ட கண்டுபிடிப்புகள் சரபேந்திர வைத்திய முறைகள் என்று தமிழில் எழுதப்பட்ட நூல்களில் விரிவாகவும், மனதில் நிற்கக்கூடிய வகையிலும் எழுதப்பட்டுள்ளது. மிருகங்களின் நோய் மற்றும் அவைகளின் பராமரிப்பு பற்றிய ஆராய்ச்சிக் கூடமும் தன்வந்திரி மகாலின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டது. இவ் வாராய்ச்சிகள் எளிதில் மருத்துவ முறையில் மேற்கொள்ளக்கூடியதாகவும் தற்காலத்திற்கேற்ற வகையாகவும் உள்ளன. தற்கால வைத்தியத்தில் முயல் போன்ற மிருகங்களில் முதலில் ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆனால் சரபோஜியின் மருத்துவர்கள் தாங்கள் புதியதாக கண்டுபிடித்த மருந்துகளை மனிதர்களுக்கே கொடுத்து ஆய்வு செய்யும் அளவிற்கு நிபுணத்துவமும் தன்னம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

ரிக் வேத விளக்கப் படங்கள்

சமஸ்கிருதத்தில் வேத சம்ஹிதைகள் ஒவ்வொரு தலைப்பிலும் எழுதிய வண்ணப்படங்கள் அழகாக வரையப்பட்டுள்ளன. அட்டையில்

உள்ள சிறு வண்ணப்படங்கள் பிரமிக்கத்தக்கதாக, மிக வேலைப்பாடுடனும் உள்ளது. இதன் காலம் 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளாகும். ஒவ்வொரு சுவடியின் கடைசிப் பக்கத்திலும் அழகிய வேலைப்பாடுடைய மலர்களின் படங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மராத்தி காகிதச் சுவடிகள்

இந்நூலகத்தில் உள்ள காகிதச் சுவடிகள், தென்னிந்தியாவில் 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மராட்டிய மன்னர்களாலும் சமர்த்த இராமதாஸ், தத்யத்ரயா மடங்களில் வாழ்ந்த மடாதிபதிகளாலும், கவிஞர்களாலும், பண்டிதர்களாலும் தொகுக்கப்பெற்று இந்நூலகத்தில் பாதுகாக்கப்பெறுகின்றன.

இச்சுவடிகள் கைவினைக் காகிதத்தாலும், 19-ஆம் நூற்றாண்டுச் சுவடிகள் இயந்திரக் காகிதத்தாலும் தேவநாகரி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன.

இச்சுவடிகள் தத்துவம், இலக்கியம், கலை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் உள்ளன.

பெரும்பாலான மராட்டி காகிதச் சுவடிகளின் முதல் ஏட்டில் அந்தச் சுவடியின் முக்கிய நிகழ்ச்சி பற்றியோ இயற்றிய ஆசிரியர் பற்றியோ இறைவனைப் பற்றியோ மிக அழகிய தஞ்சை பாணி வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அவற்றுள் சில இந்நூலக அருங்காட்சியகக் காட்சிப் பெட்டியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற சுவடிகளில் இவ்விதிகாசங்களின் வண்ணப் படங்கள் மிகவும் நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. மற்றும் இக்காட்சிப் பெட்டியில் சமர்த்த ராமதாசர் சிவாஜிக்குச் செய்த வேதாந்த உபதேசம் மற்றும் தஞ்சை அரண்மனையைச் சார்ந்த புலவர்கள் இயற்றிய சுவடிகளான "இராமாமிர்த தரங்க விவேக சிந்து", "வேதாந்த சூர்யா", "சித்த சங்கேதா" போன்றவை இங்கு வைக்க்ப்பட்டுள்ளன.

மற்றும் இந்திய ஒருமைப்பாட்டினை உறுதிசெய்யும் வண்ணம் அம்பர் ஹுசைன் என்ற இசுலாமிய அறிஞர் பகவத் கீதைக்கு மராத்தியில் எழுதிய உரையும் இடம் பெற்றுள்ளது.

சிவாஜியும் இராமதாசரும்

கி. பி. 1820-ல் வெளியிடப்பட்ட ஆத்மராமர் கிரந்தம் என்ற நூலில் தலைப்புப் பக்கத்தின் இடப்புறத்தில் சிவாஜியின் சித்திரமும் வலப்புறத்தில்

அவரது குருவான இராமதாசரின் சித்திரமும் வரையப்பட்டுள்ளது. சிவாஜீ தனது கைகளைக் கட்டிக் கொண்டும், அவருடைய வீரவாள் தரையில் இருப்பது போலவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. இராமதாசர் புலியினது தோலை அணிந்து, அமர்ந்துகொண்டு, போதிப்பது போன்ற தோற்றத்துடன் காட்சியளிக்கிறார். குரு அழகிய தாடியுடனும், பருமனான உருவத்துடனும் காட்சியளிக்கிறார். தலைப்பு மராட்டிய மொழியில் சிவப்பு எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்தைச் சுற்றிலும் மலர்களின் படம் வரையப்பட்டுள்ளது.

தாச போதம்

இது சமர்த்த இராமதாச சுவாமிகளால் மராத்திய மொழியில் எழுதப் பட்ட நூலாகும். சமர்த்த இராமதாசர் மராத்திய மன்னர் சிவாஜியின் குரு ஆவார். இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மடத்துத் தலைவர் மதோப ரத்னாகர் என்பவரால் உரையாக வெளியிடப்பட்டது. கோபாலதாசர் இதற்கு எழுத்து வடிவம் கொடுத்தார். இல்லற வாழ்வில் முழுமையாக ஈடுபடுபவர்கள் பரம்பொருளின் தத்துவத்தை அறிய முடியும் என்பது அவரது நம்பிக்கையாகும். இந்நூல் காலஞ்சென்ற மராத்திப் பண்டிதர் கணபதிராவ் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

சிவ பஞ்சரத்ன சுலோகங்கள்

இது மிக நுண்ணிய எழுத்துகளாலான சுலோகங்கள் ஆகும். ஐந்து சுலோகங்கள் திருவையாறு பஞ்சநதீஸ்வரரைப் புகழ்ந்து கவி குருதாஸ் என்பவ ரால் எழுதப்பட்டன. சாதாரணமாகப் பார்க்கும்போது இது தேவநாகரி முறை யில்எழுதப்பட்ட சுலோகங்கள் போலத்தோன்றும். ஆனால் உற்று நோக்கின் ஒவ்வொரு எழுத்தின் கோடுகளும் 'சிவ சிவ' என்ற எழுத்துகளால் உருவாக்கப் பட்டவை என்பது புலனாகும். சிவ என்ற எழுத்து பல நூறு முறைகளில் ஒவ்வொரு எழுத்திலும் திரும்பத் திரும்ப எழுதப்பட்டிருக்கும். இது இந்துக் களின் இறை பக்தியையும், சிவன்பால் உள்ள அன்பினையும், இவ்வுலகில் எப் பொருளிலும் இறைவன் இருப்பதையும் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

புருஷ ஸூக்தம்

இந்தக் காகிதச் சுவடி நான்கு தாள்களில் கருவண்ணத்தில் வெள்ளை எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.

இராணுவ உடைகள்

சரபோஜி மன்னரின் இராணுவ உடைகள் 17 படங்களில் வரையப்பட்டுள்ளன. இப்படங்கள் இராணுவ வீரர்களின் பதவியையும், அக்காலத்தே ஒவ்வொரு பதவிக்கும் உரிய உடையின் நிறத்தையும் குறிப்பிடுகின்றன.

கஜினி முகம்மதுவின் வாழ்க்கை

இது மொகலாய மரபில் பளபளக்கும் வண்ணத்துடன் கூடிய படங்களை உடைய நூல். இது கஜினி முகம்மதுவின் வாழ்க்கையைப் படமாகச் சித்திரிக்கின்றது. ஒவ்வொரு பக்கத்திலும் பாரசீக மொழியில் தலைப்பு எழுதப்பட்டுள்ளது.

சீனர்களின் தண்டனைகள்

21 படங்களை விளக்கத்துடன் விவரிப்பது இந்நூல். ஒவ்வொரு படத்திற்குக் கீழும் ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது லண்டனில் 1804-ஆம் ஆண்டு வரையப்பட்டது. இதில் குறிப்பிட்டுள்ள தண்டனைகள் மிகவும் கடுமையானதும் கொடுமையானதுமாகும். சட்டப்படி, பல்வேறு குற்றங்கள் செய்த குற்றவாளிகளைச் சித்திரவதை செய்யப் பல தண்டனை முறைகள் ஏற்படுத்தப்பட்டமையை இப்படங்கள் காட்டுகின்றன.

வரலாற்றுப் பார்வையில் தஞ்சை

சென்னையிலிருந்து தெற்கே 351 கி. மீ. தூரத்தில் தொடர்வண்டித் தடம், பேருந்துத் தடங்களின் வழி நன்கு இணைக்கப்பட்டு விளங்குவது தஞ்சாவூர் ஆகும். தமிழகத்து நகரங்களிலேயே பழமையிலும் பெருமையிலும் சிறப்பு மிக்கதாக விளங்கும் இந்நகர் சோழர், நாயக்கர், மராட்டியர் காலங்களின் தலைநகரமாகத் திகழ்ந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலான சரித்திரப் பின்னணியையுடைய இந்நகர் நம்நாட்டில் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமாக விளங்கும் இந்நகர் மிகப்பரந்த காவிரியாற்றின் கழிமுகப் பூமியில் அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாகத் தலைநகராயிருந்த சிறப்பும், அரசியல் முக்கியத்துவமும் கொண்டது. இலக்கியம் மற்றும் கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்ந்த இந்நகர் பலரையும் கவரும் தன்மையது.

புராண வாயிலாகத் தஞ்சாவூர், தஞ்சையைத் தன் இருப்பிடமாகக் கொண்ட 'தஞ்சன்' என்ற அரக்கனின் பெயரால் வழங்கப்படுகிறது, இவ் அரக்கன் ஸ்ரீ நீலமேகப்பெருமாள் மற்றும் 'ஆனந்தவல்லி' அம்மன் ஆகிய கடவுளர்களால் கொல்லப்பட்டான். தஞ்சனின் மரண கால விருப்பப்படி இந்நகர் அவன் பெயரால் அழைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. உண்மையில் தஞ்சாவூர் என்பது 'தஞ்சம் அடைந்தவர்களின் நகர்' எனப் பொருள்படுகிறது. எனவே அடைக்கலம், தஞ்சம் என்ற சொல்லிலிருந்து இந்நகர் இப்பெயரைப் பெறுகிறது. 'அளகை' என்றும் இந்நகர் அழைக்கப் படுகிறது. அதாவது கர்ணபரம்பரையாகக் குபேரன் இங்குத் தங்கிவணங்கி யதாகவும் கூறப்படுகிறது. பழங்காலப்படி ஐரோப்பிய நாடுகளில் கிரேக்கம் மட்டும் தஞ்சையுடன் ஒப்பிடப்படுகிறது. எப்படி நைல் நதியின் நன்கொடை எகிப்து ஆகுமோ அதுபோல் சோழர்களின் கலை, பண்பாடு ஆகியன பெருமை மிகு பரம்பரை உரிமையுடைய காவிரியாற்றின் நன்கொடையாகும். இதனைப் பற்றி நாம் பெருமை கொள்ளலாம்.

சோழர்கள்—கரிகாற்சோழன் (சங்க காலம்)

வரலாற்றில் குறிக்கப்படும் முதல் சோழ அரசன் கரிகால்சோழன் ஆவார். அவர் ஒரு ராஜதந்திரி, சிறந்த போர் வீரர். மேலும் பொறியியல் வல்லுநர் ஆகவும் திகழ்ந்தார். காவிரியின் இருகரைகளையும் வலுப்பெறச் செய்தார். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பிற்காலச் சோழர்களின் துறைமுகமாக விளங்கியது பூம்புகார் நகராகும். அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்பட்ட நகரைக் கரிகாலன் நிர்மாணித் தான். இந்தப் புகழ்வாய்ந்த மண்ணைப் பற்றி விரிவாகப் பட்டினப்பாலை யும், இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் கூறுகின்றன. சங்ககாலச் சோழர்களில் புகழ் மிக்க கரிகாலன், இளஞ்சேட்சென்னியின் மைந்தராவார். அவரிடம் பெயர்பெற்ற எண்ணற்ற அழகு மிக்க போர்க்கால இரதங்கள் இருந் தன. இவர் தஞ்சையிலிருந்து கிழக்கே 15 மைல் தொலைவில் உள்ள கோயில் வெண்ணி என்ற இடத்தில் சேர பாண்டியர்களை முறியடித்தார்.

விஜயாலய சோழன் (கி. பி. 850-871)

சோழரின் மறுமலர்ச்சி இவனது காலந்தொட்டே தொடங்குகிறது. பரகேசரி என்ற பட்டப் பெயருடன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேந்தன் இவன். முத்தரையர்களை வென்று தஞ்சையைக் காப் பாற்றினான். நிசும்பசூதனிக்குக் கோயிலெடுத்தான். தஞ்சைகொண்ட கோப்பரகேசரி என்று கல்வெட்டுகளில் புகழப்படுகிறான். இவனது பெயரால் விஜயாலயச் சோழீச்சரம் எனும் கோயிலும், விசயாலய சதுர் வேதி மங்கலமும் விளங்குகின்றன.

ஆதித்த சோழன் (கி. பி. 871-907)

இவன் சோழப் பேரரசன் விஜயாலனின் மகனாவான். திருப்புறம்பியப் போரில் பாண்டியர்களை அழித்த பெருஞ்சிறப்பு வாய்ந்த இவன் சைவ சமய வளர்ச்சியின் முன்னோடியாவான். காளகத்திக்கு அண்மையில் தொண்டைமான் ஆற்றூர் என்ற இடத்தில் இறந்தனன். அவ்விடத்தில் இவனது மகன் முதற்பராந்தகன் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து கோயில் ஒன்றை எழுப்பியுள்ளான். இது இப்பெரு மன்னனின் பள்ளிப் படையாகும்.

முதல் பராந்தகன் (கி. பி. 907—955)

மதுரை கொண்ட கோப்பரகேசரி எனச் சிறப்பிக்கப்படுகின்ற இவன் பெரு வெற்றி வீரனாவான். வீரத்திருமகளின் வாழ்விடமாகத் திகழ்ந்த இவன் பாண்டியர்களை அவர்களது நாட்டிலேயே எதிர்கொண்டு போரிட்டு வெற்றிபெற்று மதுரையினைக் கைப்பற்றியதனால் மதுரை கொண்ட கோப்பரகேசரி எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளான். தோல்வியினை இன்னதென்றறியாத இரண்டாம் கிருஷ்ணனை வெற்றி பெற்றவன். தில்லை நடராஜர் மீது ஆழ்ந்த பக்தி பூண்ட இவன் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் 'பராந்தகன்', 'பராந்தகனின் (சிவனின்) பாத கமலங்களில் மொய்க்கும் வண்டு போன்றவன்', 'கைலாசபதிக்குத் தில்லையில் பொன்னம்பலம் எடுப்பித்தவன்' எனப் போற்றப்படுகின்றான்.

ஆதலின் இவன் பொன் வேய்ந்த பெருமான் எனவும் சிறப்பிக்கப் படுகின்றான், இவனது காலமுதலே தில்லை நடராஜர் சோழர்களின் குல முதல்வனாகக் கருதப்பட்டுள்ளான். இவனது காலத்தில் சோழ அரசு வலிவுற்று, கலைகளும், அமைதியும், வளமும் நாட்டில் ஓங்கின. உத்திர மேரூர்க் கல்வெட்டு இவனது கிராம ஆட்சி முறையின் சிறப்புக்களைப் புகழ்கிறது. இவனுடைய மக்களில் மூத்தவனான இராஜாதித்தன் கொப்பப் போரில் இறந்தான். இவனை ஆனை மேற்றுஞ்சின இராஜகேசரி என்பர், இவனையடுத்து இவனது இரண்டாவது மகன் கண்டராதித்தன் அரசு பெற்றான். அவனை அடுத்து அவன் தம்பி அரிஞ்சயன் சோழ அரசனானான். இவனது மகனே சுந்தர சோழனாவான். சுந்தரசோழன் இறந்ததும், கண்டராதித்தனது மனைவி செம்பியன் மாதேவியின் மகன் உத்தம சோழன் கி. பி. 970 முதல் 985 வரை ஆட்சி புரிந்தான்.

மாமன்னன் இராஜராஜன் (கி. பி. 985—1014)

உலகப் பெரும் வீரர்களான அலெக்சாந்தர், சீசர் கன்னிபால் போன்ற பெருவீரன் முதலாம் இராஜராஜன். இவனது காலந்தொட்டே சோழர் வரலாறு பெரும் புகழ் பெறுகிறது. உத்தமசோழனின் மறைவிற்குப்பின் சுந்தர சோழனின் இரண்டாவது மகனாகிய அருண்மொழிவர்மன் இராஜ ராஜன் என்ற அரசுப் பெயருடன் ஆட்சி ஏற்றான். இவனது பட்டப் பெயர் இராஜகேசரி என்பதாகும். இவனது தாயின் பெயர் வானவன் மாதேவி. இவள் சேர நாட்டைச் சேர்ந்தவளாவாள். இவள் 25-6-985க்கும் 25—7—985க்கும் இடைப்பட்ட ஒரு நாளில் அரசாட்சி பெற்றிருத்தல் வேண்டும்.

சங்ககாலச் சோழர்களில் சிறந்தவனாகக் கரிகாலன் எவ்வாறு புகழப் படுகிறானோ அதுபோன்றே, சோழப் பேரரசின் மாமன்னனாக இராஜ ராஜன் புகழ் பெறுகிறான். இவனது வீரத்திருமகன் முதலாம் இராஜேந்திரன் பெற்றுத்தந்த வெற்றிச்சிறப்பு இவனது புகழை மேம்படச் செய்தது. இராஜேந்திரனது ஆற்றல்களின்றேல் இவன் மிகு புகழ் பெற்றிருக்க ஏலாது. அதுபோன்றே இராஜராஜனது கூர்த்த மதியும் திட்டங்களும் செயற்பாடுமின்றேல் இராஜேந்திரன் பேராற்றல் விளைத்திருக்க முடியாது. இவ்வாறு தந்தையும் மகனும் ஒருவருக்கொருவர் கொண்ட ஆற்றல் துணைகளால் இராஜராஜன் தென்னகம் முழுதையும் ஆட்சி செய்ததோடு கடற்படை வலிவுடன் பல தீவுகளையும் இலங்கையினையும் மலேசியா வினையும். இந்தோனேசியா மற்றும் பர்மிய நாடுகளையும் தன்னாட்சிக்கு உட்படுத்தி ஆண்டுள்ளான்.

இப்பேரரசின் பெருவளத்தால் சோழநாட்டு மக்கள் மனமும் வாழ்க்கையும் வளஞ்சிறந்தன. ஆதலின் கலைகளும் வாணிகமும் பல்கின.

பணிவு, வீரம், உறுதி, பெருந்தன்மை. புனிதம், அமைதி, கண் ணோட்டம், அறிவு நுட்பம், கருணை, பொறுமை, தியாகம், ஆற்றல் ஆகிய நற்றிறங்கள் அனைத்தும் ஒருங்கே வாய்க்கப்பட்ட பேரரசனாக இராஜராஜன் திகழ்ந்தான். அவன் மனிதனாக மட்டுமில்லை, மனிதர் களில் ஓர் உன்னதத் தலைவனாகவும் ஆட்சி புரிந்தான்.

முத்தமிழ் வளர்ச்சிக்கும் ஆக்கம் அளிக்கும் தேவாரங்களைத் தொகுத்தும், அவற்றைப் பிடாரர்கள் 48 பேரைக் கொண்டு பெரிய கோயிலில் இசைக்கச் செய்தும் நானூறு தளிச்சேரிப் பெண்டுகளைப் பெரிய கோவிலில் நடனமாடச் செய்தும், இராஜராஜ விஜயம் என்ற நாடகத்தினை

நடப்பித்தும் நாளும் நற்றமிழ்த் தொண்டினை இவன் ஆற்றியுள்ளான். ஆட்சித் திறமிக்க இவனுக்கு, நித்தவிநோதன், பாண்டிய குலாசனி சேரளாந்தகன் மும்முடிச்சோழன், சத்யாசிரியன், இராசமார்த்தாண்டன் சோழேந்திர சிம்மன், நிகரிலிச் சோழன் முதலிய 28 சிறப்புப் பெயர்களுண்டு. இவற்றால் பல வளநாடுகளும், கூற்றங்களும், ஊர்களும் அக்காலத்தே வழங்கின.

மிகச் சிறந்த அறிவுத் திறம் சான்ற அதிகாரிகள் இவனிடம் குறிப்பிடத் தக்க நிலையில் பணியாற்றினர். கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன் என்பான் இவனது சேனைத் தளபதியாவான். இவனே பெரியகோவிலின் சுற்று மதிலை எழுப்பித்தவனாவான்.

ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் என்ற பொய்கை நாட்டுக் கிழவன் இவனது அரும்படைப்பான தஞ்சைப் பெருங் கோயிலின் ஸ்ரீகார்ய பொறுப்பாற்றினான்.

சேனாதிபதி குரவன் உலகளந்தான் என்பான் வருவாய் மற்றும் அளவைத்துறைத் தலைவனாகத் திகழ்ந்தான். இவனது பெருமுயற்சியால் சோழநாடு முழுதும் அளக்கப்பெற்றது.

குடவோலை முறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்த் தலைவர்களைக் கொண்டு நாட்டாட்சி புரிந்த 'ஜனநாதனாகவும்' இராஜராஜனே திகழ்கின்றான்.

சிவபாத சேகரனாகிய இவன் தமதாட்சியில் பல கோயில்களை எடுத்துள்ளான். சைவ, வைணவ, பௌத்த, சமயங்களை ஆதரித்தான். நாகையில் கடாரத்தரசன் எடுப்பித்த சூளாமணியின் பௌத்த விகாரத்திற்கு ஆனைமங்கலத்தை பள்ளிச் சந்தமாக்கினான். அவனது கட்டிடக் கலைப் படைப்புகளுள் நாயகமாகத்திகழ்வது தஞ்சைப் பெருங்கோயிலாகும். சட்டிடக் கலைச் சிற்பங்களால் போற்றப்படும் இக்கோயில் விமானம் 216 அடி உயரமுள்ளது. இக்கோயிலை கி. பி. 1004-இல் கட்டத் தொடங்கி கி. பி 1010-இல் நிறைவு செய்து குடமுழுக்குச் செய்துள்ளான். இதனைக் கட்டிமுடித்த இவ்வரசன் பெயரால் இக்கோயில் இராஜராஜேச்சரம் என வழங்கப்பட்டு வருகிறது. பேரரசனின் பெரும் புகழ்பாடும் கலைச்சின்னமாகத் திகழும் இவ்வரிய படைப்பினைக்கண்டு வியக்காத அறிஞர் இல்லை. கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய உயர்ந்த கோயிலாக விளங்கும் இக் கலைப் பெட்டகத்தினை இராஜராஜனின் புகழுரு எனவே கொள்ளல் தகும்.

இராஜேந்திர சோழன் (கி. பி. 1012-1044)

இராஜகேசரி இராஜராஜனின் ஒரேமகனாகப் பரகேசரி இராஜேந்திர சோழன் விளங்குகின்றான். கி. பி. 1012-இல் இருந்து ஏறத்தாழ மூன்றாண்டுக் காலம் இவன் தனது தந்தையுடன் கூட்டாட்சி புரிந்துள்ளான். சோழப்பேரரசின் எல்லைப் புறங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் மிகக்கடுமையான் போர்கள் புரிந்து சோழப் பேரரசை மிக்க வலிமை யுடைய பேரரசாக உருவாக்கியுள்ளான். அவ்வழி இலங்கை சோழப் பேரரசின் ஆளுகையுள் அடங்கியது. தன் தந்தையைப் போலவே அரசாட்சியிலும் அருளாட்சியிலும் கலையாட்சியிலும் சிறப்புப்பெற்றவன். கி. பி. 1012-ல் இருந்து கி. பி. 1044 வரை ஆட்சி புரிந்த இவனது காலத்தில் சோழப் பேரரசு மிகப்பெரிய பரப்பினைக் கொண்டது. கடல் கடந்தும், கங்கை கடந்தும் வெற்றிகொண்ட சோழன் ஆதலின் கங்கை கொண்ட சோழன் எனவும் போற்றப் பெறுகிறான். கங்கை கொண்ட வெற்றியினைப் போற்றும் அளவில் தஞ்சை மாவட்டத்தின் வடமேற்கு எல்லைப் புறத்தில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை உருவாக்கினான். கடார வெற்றியினைப் புலப்படுத்துவானாகக் 'கடாரம் கொண்டான்' என்ற பெயரில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பல ஊர்கள் இன்றும் விளங்குகின்றன. முடிகொண்ட சோழன், பண்டித சோழன், வீரராஜேந்திரன், கங்கைகொண்டசோழன் போன்ற சிறப்புப் பட்டங்களை இவன் பெற்றிருந்தான். தஞ்சையில் இராஜராஜன் எழுப்பிய இராஜராஜேச்சுரத்தின் வடிவமைப்பிலேயே கங்கைகொண்ட சோழ புரத்தில் பெரும் கோயிலை எடுப்பித்தான். தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு இவன் மாற்றிக்கொண்டதற்குக் காரணம் கங்கைகொண்ட சோழபுரமானது சோழப் பேரரசின் மையப்பகுதியாகவும் தில்லைக்கு அருகாமையில் அமைந்ததாகவும், காவிரி, கொள்ளிடம் போன்ற பேராறுகள் இல்லாத நிலைமையும் அமைந்ததேயாகும் என உணர முடிகின்றது. இராஜாதிராஜன் எனவும், இராஜேந்திரதேவன் எனவும். வீர ராஜேந்திரன் எனவும் ஒருவர்பின் ஒருவராக இவனுக்குப்பின் அரசாண்ட னர். பின்னர் இராஜேந்திரனின் மகள் வயிற்றுப் பேரன் கீழைச் சாளுக்கிய மரபினன் ஆகிய முதலாம் குலோத்துங்க சோழன் அரியணை ஏறினான்.

முதலாம் குலோத்துங்கன்

சோழர்களின் நிறைநிலை பகுதியான கவின் கலை வளர்ச்சி இவன் காலம் முதலே தொடங்குகின்றது. மிகப் பெரும் பரப்பினைக் கொண்ட சோழப் பேரரசை இவன் ஆட்சி செய்ததோடு, சீனா, கடாரம், சுமத்திரா

போன்ற நாடுகளுக்கும் தனது தூதர்களை அனுப்பி அயல் நாட்டுத் தொடர்பினைப் போற்றினான். இந்திய தீபகற்பத்தின் தெற்குப் பகுதியின் சோழப் பேரரசு முக்கடலிலும் அமைந்த பெருநாடுகளோடும் அரசியல் உறவு பூண்ட பெருமை குலோத்துங்கன் காலத்தையே சாரும். இவனது மகன் விக்கிரமச் சோழன் ஆவான். அவனது மகன் இரண்டாம் இராஜ ராஜன் ஆவான். இவனுக்குப் பின்பு இரண்டாம் இராஜாதிராஜனிட மிருந்து தொடங்கி, மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் மூன்றாம் இராஜேந்திரன் எனத் தொடர்ந்து கி. பி. 1209இல் பாண்டியன் மாறவர்மன் சுந்தரபாண்டியனது எழுச்சியால் சோழப் பேரரசு வீழ்ச்சி யடைந்தது.

சற்று ஏறத்தாழ 450 ஆண்டுகள் தென்னிந்தியாவில் ஆட்சிசெய்த சோழ மரபு இந்தியாவிலேயே மிகப்பெரிய ஆட்சி மரபாக கருதத்தக்கது. ஏனெனில் வடபுலத்தை ஆண்ட மகத மரபு 137 ஆண்டுகளும் புத்தமரபு 227 ஆண்டுகளும் விஜயநகர ராயர் மரபு 340 ஆண்டுகளுமே அரசாட்சி செய்து உள்ளன.

மிகப் பெரும் வெற்றி வீரர்களாக இச்சோழ மன்னர்கள் திகழ்ந்த தோடு முத்தமிழ்க் காவலராகவும், கவின் கலை ஆர்வலர்களாகவும் அரசியல் விற்பன்னர்களாகவும் விளங்கித் தமிழகத்தைத் தமது ஆற்றலால் பொலிவுறச் செய்துள்ளனர். கடல் கடந்தும் தமிழகத்தின் புகழை மேம்படச் செய்த இவர்கள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவை உலக அரங்கில் ஒரு பெரும் வல்லரசாக நிறுவி உள்ளனர் எனவும் கருதலாம்.

நாயக்கர்கள் (கி பி. 1532—1673)

14—ஆம் நூற்றாண்டின் இறுதி வரை சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் பல்வேறு குறுநில மன்னர்கள் சோழர்கள் என்ற பெயரில் தமிழகத் தில் ஆட்சி செய்துள்ளனர், இந்நிலையில் விஜயநகரப் பேரரசர் தஞ்சையைத் தம்முடைய பேரரசுடன் இணைத்தபோது சோழநாடு அவர்களது தளபதி களால் ஆளப்பட்டது. அவ்வாறு அமைந்த விஜய நகர தளபதிகளால் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி கி. பி. 1532-இல் தோற்றுவிக்கப்பட்டது. செவ்வப்ப நாயக்கர் என்ற மன்னர் ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியன. செவ்வப்ப நாயக்கருக்குப் பின்பு அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர் விஜயராகவ நாயக்கர் என்ற மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். அறிவார்ந்த அமைச்சராகவும், நீதி நிரம்பியவராகவும், சமூகத் தொண்டுள்ளம் வாய்ந்தவ ராகவும் விளங்கிச் சோழ நாட்டிற்கு அரும்பணி புரிந்த அமைச்சர்

கோவிந்த தீட்சிதரை இன்றும் மறப்பதற்கில்லை. செந்தமிழ் நாடாம் சோழ நாட்டினைத் தெலுங்கர்களாகிய விஜய நகர நாயக்கர்கள் ஆட்சி செய்த சூழல் வியப்புக்குரியதாகவே அமையினும் தமிழகத்தின் கலைகளும் நாகரிகமும் தொடர்ந்து வளர்ச்சியினைப் பெறத்தான் செய்தன.

அச்சுதராயரிடத்தில் பணியாற்றிய திம்மப்ப நாயக்கர் என்பாரின் மகனாகிய செவ்வப்ப நாயக்கர் அரசர்க்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பணியையாற்றிய குடும்பத்தினன் ஆவார். அச்சுதராயரின் மனைவியான வரதாம்பிகையின் தங்கை மூர்த்திஅம்மாளை இவர் மணந்து அச்சுத ராயருக்குச் சகலையானார். இவ்வுரிமையால் தஞ்சையில் ஆட்சி வாய்ப்பைப் பெற்ற இவர் நன்றிக் கடனாகத் தன் மகனுக்கு அச்சுதப்பன் என பெயரிட்டார். தஞ்சை அரசினைச் செவ்வப்ப நாயக்கர் ஏற்றுக்கொண்டபோது மதுரை அரசு தனியரசாக விளங்கிற்று. அமைதியுறவும், வலிவுறவும் ஆட்சிசெய்த செவ்வப்ப நாயக்கர் திருச்சிராப்பள்ளியை மதுரை நாயக்கருக்குக் கொடுத்து வல்லத்தை அவர்களிடமிருந்து தான் பெற்றுக்கொண்டார். தஞ்சை மாவட்டத்திலுள்ள மூவலூர் கோவிலுக்குப் பத்து வேலி நிலம் தானம் அளித்தது உட்பட மிகுதியான அறக்கட்டளைகளைச் செவ்வப்ப நாயக்கர் அமைத்தார். சிவகங்கைக் குளத்தைச் செப்பம் செய்து தஞ்சையின் உட்கோட்டையினை அமைத்த பெருமை இவரைச்சாரும். இவரது நினைவைப் புலப்படுத்தும் முகத்தான் இச்குளத்திற்கு மேற்கே உள்ள ஏரி செவ்வப்ப நாயக்கன் ஏரி என வழங்கப்பட்டு வருகிறது.

அச்சுதப்ப நாயக்கர் (கி. பி. 1560—1600)

அச்சுதப்பர் வலிமை சான்ற அரசராக மட்டுமல்லாமல் மிகத் திறமையான அறிவாளியாகவும் ஆட்சி செலுத்தினார். போர்க்களத்திலே இவர் ஆற்றிய பெருவீரத்தைப் போன்றே இவரது அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் சாத்திரக் கல்வியில் பெரும் வெற்றியாளராகத் திகழ்ந்தார்.

இரகுநாத நாயக்கர் (கி. பி. 1600—1634)

அச்சுதப்ப நாயக்கருக்குப் பின் அவரது மகன் இரகுநாத நாயக்கர் தனிச் சிறப்பு மிக்க அரசராக விளங்கினார். பேரரசன் சாலமனைப் போல அறிவிலும், அப்சாலம் போல அழகிலும் சிறந்து தென்னிந்தியாவின் மிகப்பெரிய அரசராக இவர் அரசோச்சினார். விஜய நகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரைப் போன்றே பெரும் வீரராகவும், சிறந்த ஆட்சியாளராகவும் திகழ்ந்த இவர் தொப்பூர் போரில் மதுரை மற்றும் செஞ்சி அரசர்களை வெற்றிகொண்டார். யாழ்ப்பாண அரசர்க்காக இலங்கை மீது படை எடுத்து அங்கிருந்த

போர்த்துக்கீசியரை விரட்டி யாழ்ப்பாணத்தை மீட்டுக் கொடுத்தார். இவரது ஆட்சியின் கீழ் தஞ்சை அறிவிற்கும், கலைகட்கும், பண்பாட்டிற்கும், கர்நாடக இசைக்கும் புகழ்பெற்ற தலைமையிடமாக விளங்கிற்று எனலாம். இவரே மிகச்சிறந்த சமஸ்கிருத, தெலுங்கு எழுத்தாளராகவும், இசை விற்பன்னராக வும் திகழ்ந்தார். இவர் படைத்த படைப்புகளை இன்றும் சரசுவதி மகால் நூலகத்தில் காணலாம். தன் தந்தையின் காலம் முதல் இனிய அரசராகப் பணியாற்றி, சிறந்த வீரராகவும் திறமைமிக்க நிர்வாகியாகவும், பயிற்சி பெற்ற நிலையில் விஜயநகரைக் காப்பாற்றும் பொருட்டு அங்கு முற்றுகை யிட்டிருந்த தக்காணப் படைகளை எதிர்த்துச் சென்று காத்துள்ளார். இச்செயலைச் சிறப்பிக்கும் வகையில் பேரரசர் முதலாம் வெங்கட்டர் இவரது வேண்டுகோளுக்கிணங்கிச் சிறையில் இருந்த இரண்டாம் கிருஷ்ண தேவராயரை விடுதலை செய்தார்.

கி. பி. 1600-இல் இவர் அரசாட்சி ஏற்றார். தொடக்க காலப் போர்கள் இவரது ஆட்சியைக் காப்பாற்றுவதைம், பிற்காலப் போர்கள் ஆட்சியை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. கொள்ளிடத்தின் வடக்கே அமைந்த ஸ்வலேகா பகுதியிலும் இவரது படையெடுப்பு நிகழ்ந்துள்ளது. இவரது காலத்தில் தஞ்சை அரசின் வாணிகம் ஐரோப்பிய வணிகர்களோடு போட்டியிடும் வகையில் பெருகியது. டேனிஸ்காரர்க்ளைத் தரங்கம்பாடியில் குடியிருக்க 1622-இல் இவர் அனுமதி அளித்தார். அவர்கள் ஒரு வலிய கோட்டையையும் வளமான வணிகத்தை யும் அங்கே கண்டனர்.

இவரது இறுதிக் காலம் நல்லாட்சியும் அமைதியும் வாய்ந்ததாக இருந்தது. அறிவு நிரம்பிய சான்றோர்கள் இவரது அவையில் சிறப்புப் பெற்றனர். 'எக்ய நாராயண தீட்சிதர்' என்பவர் இவரது ஆட்சியைக் குறிப்பிடும்போது வறுமை அற்ற தஞ்சை நாடு, திருமகளின் வாழ்விட மாயிற்று என்று எழுதுகிறார். புலமைத் தேர்வுகளும், பக்திக் கூட்டங்களும் இவரால் நிகழ்த்தப்பெற்றுப் புலமையும் பக்தியும் சிறப்பிக்கப்பட்டன. 'யக்ஷ கானம்' போன்ற நாடகங்கள் இவர் காலத்திலே தோன்றின, தஞ்சை அரசு சிறந்து விளங்க உதவிய கோவிந்த தீட்சிதர் என்னும் அமைச்சர் இவரது காலத்திலும் பணியாற்றினார்.

விஜயராகவ நாயக்கர் (கி. பி. 1633—1673)

தஞ்சை நாயக்கர்களின் வரிசையில் தலைசிறந்த மன்னராகத் திகழ்ந்த இரகுநாத நாயக்கரின் மகனே விஜயராகவ நாயக்கராவார். இவர் தம் தந்தையைப்போல் சிறந்த ஆட்சியாளராகத் திகழ்ந்ததோடன்றிச் சிறந்த கலைஞராகவும், பெரும் புலவராகவும் திகழ்ந்தார்.

மன்னார்குடி இராஜகோபால சுவாமியைத் தம் குல தெய்வமாகப் போற்றிய விஜயராகவன் தம் வாழ்நாள் முழுவதையும் இத்திருக்கோயில் திருப்பணியிலேயே கழித்தார். எல்லா இராஜ கோபுரங்களையும் கட்டு வித்ததோடு ஆயிரங்கால் மண்டபம், கருட வாகன மண்டபம், யானை வாகன மண்டபம், வெண்ணெய்த்தாழி மண்டபம் ஆகிய மண்டபங்களையும், திருச் சுற்று மதிலையும் எடுப்பித்துக் கலைப்பணி புரிந்தார்.

மதுரை நாயக்கரான சொக்கநாதனுடன் இருமுறை விஜயராகவன் போரிட நேர்ந்தது. கி.பி. 1664-இல் ஒரு போர் நிகழ்ந்து செஞ்சி, மதுரை, தஞ்சை நாயக்கர்களிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. பின்னர் கி. பி. 1673-இல் மதுரைச் சொக்கநாதனுக்கு விஜயராகவன் தம் மகளைத் திருமணம் செய்துதர மறுத்ததால் பகை மூண்டு போர் ஏற்பட்டது. வல்லம் கோட்டையைக் கைப்பற்றியபின் சொக்கநாதரின் படைகள் தஞ்சையையும் முற்றுகை இட்டன. வெற்றிகொள்ள முடியாத நிலைமை உருவானபோது, விஜயராகவன் பகைவனிடம் சரண் அடைவதைவிட சாவே மேல் எனக்கொண்டு தம் அரண்மனையின் ஒரு பகுதியில் தமது உரிமை மகளிர், மகன் மற்றுமுள்ள அனைவரையும் ஒரு முகமாக இருக்கச் செய்து, அப்பகுதிக்கு வெடிகுண்டை வைத்து அனைவரையும் செந்தழலுக்கு இரையாக்கியதோடு தாமும் தமது மகனும் சேர்ந்து மாண்டனர். இறுதி வரை அடிபணியாது வரலாறு படைத்த பெருமை விஜயராகவனுக்குண்டு.

வெங்கோஜி என்னும் ஏகோஜி (கி. பி. 1676—1683)

மராத்திய மாநிலத்தில் வாழ்ந்த சகசி என்பாருக்குப் பிறந்த இரு மக்களில் முதலாமவர் மராத்திய மாநிலத்தில் பொற்காலத்தை உருவாக்கிய சத்திரபதி சிவாஜியாவார், இவர் சகஜியின் முதல் மனைவியின் மகன். இரண்டாவது மனைவிக்கு மகனாய்ப் பிறந்தவரே வெங்கோஜி என்னும் ஏகோஜி. இதுவரை ஏகோஜி பற்றி எழுதிய ஆய்வாளர்கள் 'டெய்லர்' என்பவரின் ஆவணங்களின் அடிப்படையில் எழுதினர். ஆனால் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளால் வரலாறு மாற்றம் பெற்றுள்ளது.

போன்சலே வமிச சரித்திரம் என்ற சரபோஜி மன்னரின் கல்வெட்டு கள், மராத்திய வம்சாவளி என்ற அமரசிம்மனின் சுவடித்தெர்குப்பு ஆகிய வற்றின் அடிப்படையில் நோக்கும்போது, முதலில் உதவிக்காக வந்த ஏகோஜி, பின்னர் முகம்மதிய படைத்தலைவர்களின் தூண்டுதலால் தஞ்சை நாயக்க மன்னர் விஜயராகவனைப் போரிட்டுக்கொன்று, பின்பே தஞ்சை அரசுக் கட்டிலில் அமர்ந்தான் என்ற செய்தி பெறப்படுகிறது. மேலும் இதனை வலியுறுத்தும் வண்ணம் ஏகோஜியின் அமைச்சர் ரகுநாதபந்த்

ஏகோஜியை விட்டு விலகி, சத்ரபதி சிவாஜியுடன் இணைந்துகொண்டு அய்யம்பேட்டைப் போரில் ஏகோஜியை முறியடித்த செய்திகளும், சத்ரபதி சிவாஜி ஏகோஜிக்கு எழுதிய கடிதங்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன. இவர் பல அரிய நூல்களை இயற்றியுள்ளார். சில கிடைத்துள்ளன. பல கிடைக்கவில்லை.

இரண்டாம் சகஜி (கி. பி. 1684—1712)

இவர் தஞ்சையில் மராட்டிய அரசைத் தோற்றுவித்த ஏகோஜியின் மூத்த புதல்வர் ஆவார்; இவருடன் பிறந்தவர்கள் முறையே முதலாம் சரபோஜியும் துளஜாவும் ஆவர். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் களின் வரிசையில், தமது ஆட்சியாலும், திறமையாலும் முதலிடம் வகிப்பவர் இவரே.

சகஜி மன்னர் தஞ்சை அரண்மனையில் அரசோச்சும்போது கும்ப கோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டையில் முதலாம் சரபோஜியும், மன்னார்குடிக்கு அருகிலுள்ள மகாதேவப்பட்டினத்தில் துளஜாவும் அமர்ந்து கொண்டு அந்தந்த சபாக்களைத் திறம்பட நிருவகித்தனர். இராமநாதபுரம் அரசர் கிழவன் சேதுபதி, மதுரை நாயக்க அரசி மங்கம்மாள் ஆகியோருடன் சில நேரங்களில் மோதல்கள் இருந்தபோதும் நட்புறவுடன் அரசோச்சினார்.

தாமே ஒரு பெரும்புலவராகவும், இசைமேதையாகவும், நாட்டியக்கலை விற்பன்னராகவும் திகழ்ந்ததால் இவரது அவையில் பன்மொழிப் புலவர்களின் குழாமும், இசைமேதைகளின் சங்கமமும், நாட்டிய வித்தகர்களின் கூட்டுறவும் மிகுதியாகக் காணப்பெற்றன. கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, பரத நாட்டியம் போன்றவை தஞ்சை அரண்மனையில் ஆக்கம் பெற்றன. இவரது காலத்தில் இத்துறை இலக்கியங்கள் மலர்ந்த அளவு தஞ்சை மண்ணில் வேறு எந்த அரசர் காலத்திலும் இவ்வளவு இலக்கியங்கள் மலர்ந்ததில்லை.

தஞ்சை அரண்மனையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி, இந்தி ஆகிய மொழிகள் சங்கமித்தன. சகஜி மன்னரே பன்மொழிப் புலமை யுடன் திகழ்ந்ததால் இவரே பல மொழிகளிலும் கவிதைகள் புனைந்தார். இவரது சான்றாண்மைக்குக் காரணமாகத் திகழ்ந்தவர்கள் பெரும் புலவர்க ளாகவும், அமைச்சர்களாகவும் திகழ்ந்த "திரயம்பகராயமகி" "பகவந்தராயர்" ஆகியோர் ஆவார். சகஜி கும்பகோணத்திற்கு அருகிலுள்ள, சாகராஜபுரம் (திருவிசைநல்லூர்) என்னும் ஊரை 46 பெரும்புலவர்களுக்கு அளித்து அழியாப் புகழெய்தினார். திருவிசலூர் ஐயாவாள் எழுதிய "சாகேந்திரவிலாசம்" என்னும் நூல் சகஜியின் வாழ்க்கையைப்பற்றி விவரிக்கும் ஓர் அரிய சமஸ்கிருத

நூலாகும். சகஜி மன்னரது படைப்புகள் பல தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் இன்றும் உள்ளன.

இவர் தம் இறுதி நாள்களில் அரசுப் பொறுப்புகளில் இருந்து முழுது மாக விலகி ஆன்மீகத்துறையில் ஈடுபட்டு வல்லம் கோட்டையில் உயிர் நீத்தார்.

முதலாம் சரபோஜி (கி. பி. 1712—1728)

சகஜி மன்னரின் இரண்டு தம்பியர்களுள் முதலாமவர் சரபோஜி. இவரது தம்பி துக்கோஜி எனும் முதலாம் துளஜாஜியாவார். தஞ்சையில் சகஜி ஆட்சி நடத்தும்போது சாக்கோட்டையில் ஒரு சிறிய கோட்டை அமைத் துக்கொண்டு சோழ மண்டலத்தின் ஒரு பகுதியைச் சகஜியின் சார்பாளராகச் சரபோஜி ஆட்சி புரிந்தார். கி. பி. 1712-இல் சகஜி அரசுப் பொறுப்புகளி லிருந்து ஓய்வு பெற்றதும் இவர் தஞ்சை மன்னரானார்.

சிறந்த அறிவுடன் திகழ்ந்த இவர் பன்மொழிப் புலமையுடனும் திகழ்ந்தார். இவர் வடமொழியில் 'இராகவ சரிதம்' எனும் நூலை எழுதினார். சகஜி மன்னர் காலத்தில் இசை, நாட்டியம், நாடகம், இலக்கியம் முதலிய பல துறை வளர்ச்சிகளுக்குச் சரபோஜியும் காரணமாய்த் திகழ்ந்தார். திருக்கட ஊரில் வாழ்ந்த அபிராம பட்டர் இம்மன்னரின் வணக்கத்திற்குரியவராக மதிக்கப்பட்டார். அபிராம பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி, சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகம் முதலிய தமிழ் இலக்கியங்கள் முதலாம் சரபோஜியின் காலத்தில் மலர்ந்த நூல்களாகும்.

துக்கோஜி எனும் முதலாம் துளஜா (கி. பி. 1729—1735)

முதலாம் ஏகோஜி மன்னருக்கும், தீபாம்பா அம்மையாருக்கும் மூன்றாம் மகனாய்ப் பிறந்தவரே துளஜா. தம் சகோதரர்களான சகஜி, முதலாம் சரபோஜி மன்னர்களின் ஆளுகைக்குப்பின்பு தஞ்சை அரியணையில் கி. பி. 1729-இல் அமர்ந்தார். சகஜி தஞ்சையை ஆளும்போதே துளஜா மன்னார்குடிக்கு அருகிலுள்ள மகாதேவ பட்டினத்தில் ஒரு கோட்டையை அமைத்துக்கொண்டு அப்பகுதியின் நிருவாகப் பொறுப்புகளை ஏற்றார்.

மகாதேவ பட்டினத்து வாழ்க்கை துளஜா மன்னருக்கு ஏற்புடையதாக அமைந்தது. சிறந்த புலமையும், மருத்துவ அறிவும் பெற்றுத் திகழ்ந்த இவர், பல நூல்களை மகாதேவ பட்டினத்தில் இருக்கும்போது யாத்தார். இவரது அவையைப் பல புலவர்கள் அலங்கரித்தனர். கனச்யாம பண்டிதர் எனும்

வடமொழிப் புலவரும், மானம்பட்டர் எனும் சிறந்த அறிஞரும் துளஜாவால் போற்றப்பட்டவர்கள்.

துளஜா தமிழ், மராத்தி, தெலுங்கு, சமஸ்கிருதம், பாரசீகம் ஆகிய பன் மொழிகளிலும் புலமை மிக்கோங்கித் திகழ்ந்தார். மகாதேவ பட்டினத்தில் இவரெடுத்த மகாதேவர் திருக்கோயிலும், சுவேதவராகர் திருக்கோயிலும் இவரது கலைத் திறமையை எடுத்துக்காட்டும் சிறந்த சின்னங்களாகும்.

துளஜா எழுதிய நூல்களாக நமக்குக் கிடைப்பவை ஒன்பது சுவடி களாகும். இவையனைத்தும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோஜி (கி. பி. 1736—37)

கி. பி. 1728 – 1736 வரை தஞ்சையை ஆட்சிபுரிந்த துக்கோஜியின் புதல்வரான பாவாசாகிப் தம் தந்தையின் மறைவிற்குப்பின் அரியணையில் அமர்ந்தார். இவரது ஆட்சி ஓராண்டுக்காலமே நீடித்தது. உடல்நலக் குறை வால் 41-வது வயதிலேயே காலமானார். இவரது ஆட்சியின்போது சந்தா சாகிப்போர் தொடுத்தார். சந்தா சாகிப்பின் படைகள் திருச்சிக்குச்செல்லும் வழியில் தஞ்சையைத் தாக்கத்தொடங்கின. பாவா சாகிப் தீரமுடன் போரிட்டுச் சந்தா சாகிப்பின் படைகளைப் பின்னடையச் செய்தார். தஞ்சையைச் சந்தா சாகிப்பின் வலையில் விழாமல் காப்பாற்றிய சாதனை இவருடையதாகும்.

தஞ்சை அரண்மனையின் கோட்டைக் காவல் அதிகாரியான கில்லேதார் சையத், என்பான் பாவாசாகிப்பின் காலத்திலேயே பல சூழ்ச்சிகளில் இறங் கினான். திறமையற்ற சிலரை அமைச்சர்களாக நியமித்தது, கருவூலத்தின் நிதி நிலைமைக் குறைபாடு முதலான பல காரணங்கள் இவரது ஆட்சியைப் பாதித்ததோடு, இவரது மனைவியான சுஜான்பாயின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தன. சாகிப்பின் மனைவி சுஜான்பாய் தஞ்சை அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்து, எதிரிகளுடன் வாளேந்திப் போரிட்டு வீரமரணம் அடைந்த ஒரே வரலாற்று நாயகி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுஜான் பாய் (கி. பி. 1737—38)

தஞ்சை மராத்தியர் ஆட்சியிலே அரியணையில் அமர்ந்த ஒரே பெண்ணரசி சுஜான் பாய் ஆவார். கி. பி. 1736-37-இல் ஓரே ஆண்டு மட்டும்

மன்னராகத் திகழ்ந்த பாவா சாகிப் எனும் இரண்டாம் ஏகோஜியின் மனைவியே சுஜான் பாய். தமக்கு மகப்பேறு இல்லாததால் தம் கணவரின் மரணத்திற்குப் பின்பு, தாமே அரியணையில் அமர்ந்து வரலாறு படைத்தார்.

சுஜான் பாயின் அரசாட்சி மூன்றாண்டுகள் நீடித்ததாகச் சுவடிகள் கூறுகின்றன. சகம் 1690-இல் (கி. பி. 1737-இல்) பாவாசாகிப் இறந்தவுடன் காட்டுராசா எனத் தன்னைக் கூறிக்கொண்ட சாகுஜி தானே மராத்திய அரசுக்கு முறையான வாரிசு என அறிவித்து, தஞ்சை அரண்மனையில் கலகம் விளைவித்தான். சித்தோஜி, துளஜி, துக்காஜி, சுப்பாசெட்டி போன்ற உயர் பதவி வகித்த அதிகாரிகள் மறைமுகமாகக் காட்டுராஜாவுக்கு ஆதரவு அளித்துச் சுஜான் பாய்க்கு எதிராகச் சூழ்ச்சிகள் பல செய்தனர்.

கோட்டையின் இராணுவப் பாதுகாப்புத் தலைவனான கில்லேதார் பதவி வகித்த சையத் இராணுவத்தினரைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு காட்டுராஜாவுக்கு உதவி அளிப்பதுபோல், சுஜான்பாயைக் கைது செய்ய முற்பட்டான். அப்போது சுஜான்பாய் தாமே வாளேந்தி சையத்துடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். இக்கடுஞ்சமர் தஞ்சைக் கோட்டையினுள் அரண்மனையின் வடக்கு உள் வாசலருகே நடைபெற்றது.

சோழமண்டலத்து வரலாற்றிலேயே ஒரு பெண் அரியணையமர்ந்து அரசாட்சி செய்து, வாளேந்திக் கடுஞ்சமர் புரிந்து, வீர மரணம் அடைந்தார் என்றால், அது சுஜான் பாயைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. இவ்வகையில் தனி வரலாறு படைத்த சுஜான் பாயின் ஓவியம் இன்றும் தஞ்சையிலுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சாஹூஜி-காட்டுராஜா :- (கி. பி. 1738—1739)

சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்கள் வீற்றிருந்த அரியாசனத்தில் சையத்தின் உதவியினால் சாஹூஜி அமர்ந்திருந்தார். தனது குறைகளை அறியாமல் இவர் தன் நாடுகளை டச்சு, பிரஞ்சுக்காரர்களுக்கு விட்டுக் கொடுத்தார். தஞ்சைக்கு உரிமையில்லாதவர் இவர் என்று அறிந்த சந்தா சாகேப் இவரை வென்றான். மக்கள் தீர்வுப்படி 1739-இல் பிரதாபசிம்மன் அரசனானான்.

பிரதாப சிம்மன் (கி. பி. 1739—1763)

சுஜான் பாயின் மரணத்திற்குப் பிறகு ஆட்சி உரிமை பெறப் பலர் முயன்றனர். பாவா சாகிப் (இரண்டாம் ஏகோஜி) சுஜான் பாய் தம்பதிகளுக்கு முறையான வாரிசு இல்லாததால், பாவாசாகிப் - அன்னபூர்ணா அம்மையா

ருக்கு மகனாய்ப் பிறந்த பிரதாப சிம்மனுக்கே ஆதரவு இருந்ததால், அவர் கி. பி. 1739-இல் தஞ்சை அரசராக மணிமுடி சூட்டிக்கொண்டார்.

தஞ்சை மராத்தியர்கள் வரலாற்றில் பிரதாப சிம்மனின் ஆட்சியில்தான் பல போர்க்களங்களைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டது. பிரதாப சிம்மனுக்கு முன்னவர்களின் ஆட்சி, போர் நிகழ்ச்சிகளன்றி அமைதியாகவும், பின்னவர்கள் ஆட்சி ஆங்கிலேயர்களுக்குப் பணிந்த அரசாகவும் திகழ்ந்தது. இவரது ஆட்சியில் நவாப்புகள், நிஜாம்கள், ஆங்கிலேயக் கம்பெனியர், பிரஞ்சுக்காரர்கள் முதலானவர்களின் பலமுனைத் தாக்குதல்கள் மற்றும் தலையீடுகளைச் சமாளிக்க வேண்டிய மிகக் கடுமையான நிலை உருவாயிற்று. தமது தானைத் தலைவரான மானோஜி என்பவரின் பெரு வீரத்தாலும், நுண்ணறிவின் திறனாலும் பிரதாப சிம்மன் பல வெற்றிகளை அடைய முடிந்தது.

மானோஜியைப் போலவே டபீர் பண்டிதரின் உறுதுணையும் இம்மன்னர் செவ்வனே செயலாற்ற உதவிற்று. தஞ்சை அரசைத் தவிர சுற்றுப்புறம் முழுவதும் முகலாயர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு காலக் கட்டத்தில், பிரதாப சிம்மன் தமது நாட்டை முகமதியர்களின் வலையில் சிக்காமல் காக்க வேண்டியதாயிற்று. திருச்சியில் பிரஞ்சுக்காரர்களுடன் சந்தா சாகேப், தஞ்சையில் காட்டுராஜாவான சாகுஜி மற்றும் கில்லேதார் சையத் முதலியவர்களின் சதி, கிழக்கிந்தியக் கம்பெனியின் உறவுடன் கருநாடக நவாப் மற்றும் நிஜாம் போன்ற அனைவரின் எதிர்ப்பு ஆகியவற்றைச் சந்தித்து, சமாளித்து, தஞ்சை அரசை நடத்திய ஒரு பெருவீரர் பிரதாப சிம்மனாவார்.

இரண்டாம் துள்ஜா (கி. பி. 1763—1787)

கி. பி. 1739 - 1763-இல் தஞ்சையை மிகச்சிறப்பாக ஆட்சி புரிந்த பிரதாப சிம்மனுக்கும்-யமுனாம்பாள் அம்மையாருக்கும் மகவாய்ப் பிறந்தவரே துளஜா. தம் தந்தையின் சிறப்பான ஆட்சிக்கு உறுதுணையாய் நின்றவர். இவருக்குத் தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்திருந்தது. கஸ்தூரி ரங்கையாவின் மாணவரான அல்லூரி குப்பண்ணாவுக்கு 'ஆந்திர காளிதாசன்' என்ற விருதை அளித்துச் சிறப்பித்தார். இக் குப்பண்ணா பஞ்சநதஸ்தல புராணம், இராமாயண யக்ஷ கானங்கள், பாகவத கதைகள், பரம பாகவத சரிதம், இந்துமதி பரிணயம், கர்மவிபாகம் முதலான நூல்களை யாப்பதற்குப் பெரிதும் துணைபுரிந்தார்.

கி. பி. 1771-இல் துளஜா இராமநாதபுரம் பாளையக்காரருடன் போரிட ஆயத்தமானார். இதனால் அனுமந்தகுடியையும், சின்னமருது, பெரியமருது ஆகியோரிடமிருந்து திறையையும் பெற்றார். ஆர்க்காட்டு

நவாப்பும் கம்பெனியாரும் சேர்ந்துகொண்டு துள்சா மன்னருக்குக் கடும் தொல்லைகள் கொடுத்தனர். இதன் முடிவாக ஆர்க்காட்டு நவாப்பிற்கு ஒரு பெரும் தொகை செலுத்துவது என உடன்படிக்கையாயிற்று. கிழக்கிந்தியக் கம்பெனி இதற்கு ஆதரவு காட்டியது. ஆனால் துளஜாவால் அத்தொகையைச் செலுத்த முடியவில்லை.

நவாப் முகமதுஅலி, கம்பெனியாரின் உதவியுடன் கி. பி. 1773-இல் தஞ்சையைத் தாக்கி, துளஜாவைச் சிறைகொண்டான். மூன்றாண்டுகள் துளஜா அரண்மனையிலேயே சிறையில் இருந்தார். தஞ்சை அரசு நவாப்பின் ஆளுகையில் இருந்தது. கி. பி. 1776-இல் ஆங்கில நிருவாகம் (Court of directors of England) இதனைத் தள்ளுபடி செய்து, சென்னையில் கவர்னராக இருந்த லார்டு பிகாட் என்பவரைத் தஞ்சைக்கு அனுப்பித் துளஜாவை மீண்டும் அரியணையில் அமர்த்தியது. கி. பி. 1787-இல் துளஜா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அமரசிம்மன் (கி. பி. 1787—1798)

கி. பி. 1739-63 வரை தஞ்சையை ஆட்சிபுரிந்த பிரதாப சிம்மனுக்கும் சக்குவார் பாய் என்ற அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவரே அமரசிம்மன். பிரதாப சிம்மன் சக்குவார்பாயை மராத்தியர்களின் மணச்சடங்குகளில் ஒன்றான வாள் மணம் (கத்தி கட்டிக் கல்யாணம்) புரிந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. பிரதாப சிம்மனின் மறைவிற்குப் பிறகு துளஜா ஆட்சி புரிந்தார். கி. பி. 1787-இல் துளஜா மரணமடைந்தார். இவரது மறைவுக்கு முன் சரபோஜி என்ற இளைஞனை தத்து எடுக்க ஏற்பாடுகள் செய்தனர் துளஜாவின் மறைவிற்குப் பின் சரபோஜிக்குக் காப்பாளராகத் திகழ்ந்த அமரசிம்மன் கி. பி 1787-ஆம் ஆண்டு ஏப்ரல் 7-ஆம் நாள் (பிரபாவ வருடம் பங்குனி 28-ஆம் தேதி சனிக்கிழமை) பட்டாபிஷேகம் செய்துகொண்டார்.

இரண்டாம் சரபோஜி (கி. பி. 1798-1833)

இரண்டாம் துளஜா மன்னரின் மறைவிற்குப்பின் அமரசிம்மனை ஆதரித்து ஒரு பிரிவினரும் எதிர்த்து ஒரு பிரிவினரும் செயல்பட்டனர். அப்போது இதனை ஏற்றதொரு சந்தர்ப்பமாகக்கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியார் செயல்படத் துவங்கினர். சுவார்ட்ஸ் பாதிரியாரின் பராமரிப்பில் வளர்ந்த சரபோஜியைக் கம்பெனியார் அமரசிம்மனுக்குப் பதிலாக நியமித்தனர். கி. பி. 1798-இல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தயவால் முடிசூட்டப்பட்ட சரபோஜியின் தனியாட்சி ஓராண்டு மட்டுமே நீடித்தது. பின்னர் கம்பெனியார், சரபோஜியின் ஆட்சியில் குறைகளெனக்கூறி அவரது நாடாளும்

உரிமையைப் பறித்து, அதற்குப் பதிலாக ஓய்வூதியம் வழங்கினர். இதன்படி கம்பெனியாரிடமிருந்து 1 இலட்சம் பகோடா ஓய்வூதியத்தையும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கையும் பெற்றார். மன்னர் என்ற பெயர் இருந்ததேயன்றி நாடாளும் உரிமை அனைத்தையும் கம்பெனியாரே கவனித்தனர். அரசு நிருவாகச் சுமையில்லாததால் கவின் கலைகளை வளர்ப்பதிலும், தலைசிறந்த நூலகம் ஒன்றைப் பேணிக் காப்பதிலும் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார். யமுனாம்பாபாயி, அகல்யாபாயி என்ற இரு மனைவியரை மணந்தார். கி. பி. 1832 மார்ச்சு 7-ஆம் நாள் (கர வருஷம் பால்குண சுத்தபஞ்சமி) இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தஞ்சை மராத்திய அரசர்களில் முத்தமிழுக்கும் அருந்தொண்டு ஆற்றியவர்களில் இரண்டாம் சரபோஜி குறிப்பிடத்தக்கவர். இவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் சிறந்திருந்ததோடு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் வல்லுநராயிருந்தார். வைத்தியத்தில் ஈடுபாடு கொண்டு சரபேந்திரர் வைத்திய முறைகள் என்ற பெயரில் 18 தொகுதிகளைத் தொகுத்துள்ளார். இவர் பல கல்வி நிலையங்களை நிறுவியதோடு, தஞ்சைப் பெருங்கோயிலில் பல திருப்பணிகளையும் செய்து, தஞ்சை மராத்திய அரச வம்சாவளியை அக்கோயிற் கல்வெட்டில் பொறித்தும் வைத்துள்ளார். அது போன்சுலே வம்ச சரித்திரம் என்று அழைக்கப்படும். இவர் செய்த திருப்பணிகளில் குறிப்பிடத்தக்கவை பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றிலுள்ள கணேசர் ஆலயத்தினைத் திருப்பணி செய்து புதிய சிலை ஒன்றை எழுந்தருளச் செய்ததும், சுப்பிரமணியர் கோயில் திருப்பணி செய்ததும், பெரியநாயகி அம்மன் கோயிலின் அர்த்த மண்டபத்துக்குத் தளவரிசை அமைத்ததும் ஆகும். (கி. பி. 1800-1803). சரபோஜியின் கட்டிடப் பணிகளில், ஒரத்தநாட்டிலுள்ள முக்தாம்பாள் சத்திரமும், சரபேந்திரராஜ பட்டினத்திலுள்ள மனோரா என அழைக்கப்படும் கட்டிடமும் குறிப்பிடத்தக்கவை.

பல அருங்கவிஞர்கள் இவரது அவையை அலங்கரித்தனர். இவர் தன்வந்தரி மகால் என்ற நிறுவனத்தை உருவாக்கி நாட்டிலுள்ள சிறந்த வைத்தியர்களை அழைத்து வைத்திய முறையைப் பாடல்களாகத் தொகுத்துள்ளார். சிவக்கொழுந்து தேசிகர், காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், சுப்பராயக் கவிராயர் முதலானோர் இவர் அவையைச் சிறப்பித்தனர். மெலட்டூர் பாகவதமேளா மரபிற் சிறந்த வெங்கட்ராம சாத்திரியாரும் உலகு புகழ் கருநாடக சங்கீத மேதை தியாகராஜ சுவாமிகளும் இவரது காலத்தில் வாழ்ந்தவர்களாவார். இவரது அவையில் புகழ்வாய்ந்த நட்டுவனார்கள் பரத நாட்டியத்திற்கு அருந்தொண்டு ஆற்றினார். தஞ்சாவூர் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்கள் இவரது அவையில் நாட்டியப்பணி புரிந்தனர். சரபேந்திர

பூபால குறவஞ்சி என்ற நாடகம் இயற்றப்பட்டுத் தஞ்சைப் பெருங்கோயிலின் நாட்டியமாக நடத்தப்பெற்றது.

சிவாஜி (கி. பி. 1833—1855)

தஞ்சை மராத்திய அரசின் கடைசி மன்னராகத் திகழ்ந்தவர் சிவாஜி ராஜா ஆவார். இவர் சரபோஜி மன்னரின் ஒரே புதல்வர், சரபோஜி மன்னரின் மறைவிற்குப் பிறகு தஞ்சை அரண்மனையில் மன்னர் என்ற பெயரில் கி. பி. 1833-இல் அரியணையில் அமர்ந்தார். அரசு நிருவாகம் அனைத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே நடத்தினர். எனவே, இவரது அரசியல் சாதனைகளாக எதுவும் அமையவில்லை. இவரது முயற்சியால்தான் தஞ்சைக்கும் திருவையாற்றுக்கும் இடையே உள்ள எல்லா ஆறுகளிலும் பாலங்கள் கட்டப்பட்டன. இதற்குச் சான்று கூறும் கல்வெட்டுகளை இன்றும் தஞ்சை வெண்ணாற்றுப் பாலத்தில் காணலாம்.

கி. பி. 1855-இல் மறைந்த சிவாஜியின் சாதனைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று, தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்று மண்டபத்தில் ஆலவாய்ப் புராணத்தை வண்ண ஓவியங்களாகத் தமிழில் காட்சி விளக்கத்துடன் இடம் பெறச் செய்ததுதான். தஞ்சை அரண்மனை நூலகத்தைத் தம் தந்தையைப் போன்று போற்றிக் காத்தார்.

அருள்மிகு சரஸ்வதி



சமர்த்த ராமதாச சுவாமிகள்

இரண்டாம் சரபோஜி மன்னர்

தஞ்சைப் பெரிய கோயில் (டேனியல் ஓவியம்)

திருச்சி மலைக்கோட்டை (டேனியல் ஓவியம்)



"மனோரா" சாளுவ நாயக்கன் பட்டினம் - 1815



OF THE ROMAN EMPIRE.

rous stag entangled his horns in the belt of Basil, and raised him from his horse; he was rescued by an attendant, who cut the belt and slew the animal; but the fall, or the fever, exhausted the strength of the aged monarch, and he expired in the palace, amidst the tears of his family and people. If he struck off the head of the faithful servant, for presuming to draw his sword against his sovereign; the pride of despotism, which had lain dormant in his life, revived in the last moments of despair, when he no longer wanted or valued the opinion of mankind.

What are we to understand by this !

புத்தகத்தின் உள்ளே சரபோஜி மன்னரின் குறிப்பு



Romanus II Junior, A.D. 959, Nov. 15.

The death of Constantine was imputed to poison; and his son Romanus, who derived that name from his maternal grandfather, ascended the throne of Constantinople. A prince who, at the age of twenty, could be suspected of anticipating his inheritance, must have been already lost in the public esteem; yet Romanus was rather weak than wicked; and the largest share of the guilt was transferred to his wife, Theophano, a woman of base origin, masculine spirit, and flagitious manners. The sense of personal glory and public happiness, the true pleasures of royalty, were unknown to the son of Constantine; and, while the two brothers, Nicephorus and Leo, triumphed over the Saracens, the hours which the emperor owed to his people were consumed in strenuous idleness. In the morning he visited the circus; at noon he feasted the senators; the greater part of the afternoon he spent in the *sphæristerium*, or tennis-court, the only theatre of his victories; from thence he passed over to the Asiatic side of the Bosphorus, hunted and killed four wild boars of the largest size, and returned to the palace, proudly con-

Good Epithet

புத்தகத்தின் உள்ளே சரபோஜி மன்னரின் குறிப்பு



Serfojee Maharaj 1822

THE

Justice of the Peace,

AND

PARISH OFFICER.

By RICHARD BURN, LL.D.

LATE CHANCELLOR OF THE DIOCESE OF CARLISLE.

1958

புத்தக முகப்புப் பக்கத்தில் சரபோஜி மன்னரின் கையொப்பம்

(வருடத்துடன்)

“ திருவாய்மொழி வாசகமாலை ” ஓலைச்சுவடியின் (சித்திரத்துடன் கூடிய ஏட்டுடன்) தோற்றம்





'பலவதி' நூலின் ஓலைச்சுவடி



மனித—விலங்கு ஒப்புமைப் படங்கள்



மனித—விலங்கு ஒப்புமைப் படங்கள்



மனித — விலங்கு ஒப்புமைப் படங்கள்



மனித — பறவை ஒப்புமைப் படங்கள்



கஜ சாஸ்திரத்தில் ஒரு காட்சி
பாலகாப்பிய முனிவர் தன் சீடர்களுடன்

கஜ சாஸ்திரத்தில் ஒரு காட்சி — கணபதி



திருமால்
கஜ சாஸ்திரம்



மகாபாரதம் — மராத்திச்சுவடி



பிரம்மாவும் ஐராவதமும், பிரம்மாவும் முனிவர்களும் — கஜ சாஸ்திரம்

நகுலரும் சாலிகோத்திர முனிவரும் குதிரைகளுடன்— அசுவ சாஸ்திரம்



கிருஷ்ணனுடன் பஞ்சபாண்டவர்கள்—அசுவ சாஸ்திரம்



இரதி — அசுவ சாஸ்திரம்

மன்மதன்

நாரதர் — அசுவ சாஸ்திரம்

अथ आयुर्लक्षणं आयुर्लक्षणमश्वानामत ऊर्ध्वं प्रवक्ष्यते शालिहोत्रादिनिर्दि
ष्टं यथापूर्वं तपोधनैः सुमहान्तश्च ये वाहाः ह्रस्वकर्णास्तथैव च स्वरमेत्रस्वनावे
षु नदीनां चिरजीविनः महाघोणा महाकाया ये चाश्वाः पृथुवक्षसः तथा दीर्घं
भवेत्त्वायुः स्निग्धांगाश्चैव ये सदा ८७

அசுவ சாஸ்திரம்

அசுவ சாஸ்திரம்

சரபோஜியின் வேட்டைப் பறவை



Cataract Capsule and Iritis
[illegible] Age 22
Of a good habit
[illegible] August 1827 This affection is of one year standing, which he traces
to an attack of inflammation produced by a fall. Let him take purge
and apply the Solution of Belladona every Morning
[illegible] The pupil is fully dilated. The Capsule is much thickened and
[illegible]. Continue Belladona
[illegible] Introduced [illegible] and broke up the Capsule which adhered to the
[illegible], it was very tough and much thickened. Part of it is in the
anterior Chamber. Evening there is much pain in Globe. Apply
Leeches N° [illegible]. [illegible] Draught. Apply extract of Belladona
[illegible] There is still pain and much redness in the Lachrymal [illegible]
Repeat Leeches N° 8. Continue Belladona
[illegible] He is greatly better. Let him have Rhubarb powder gr. 15. [illegible]
[illegible]
[illegible] The pupil is nearly large, clear & round. A portion of the
detached Capsule is floating in the anterior Chamber. The [illegible]
is improving daily. There is some [illegible] redness [illegible]
[illegible]
[illegible] There is a small portion of Opaque [illegible] adhering to the Nasal
portion of the [illegible]
[illegible] Sight is gradually improving [illegible]
[illegible] Doing well
[illegible]
[illegible]

கண் சிகிச்சையின் விவரப் படிவம்

பார்வதி பரமேஸ்வரனின் தெய்வத் திருமணக் கோலம்

ஹாலாஸ்ய புராணத்தின் ஒரு காட்சி

ஹரபக்தரின் கதை

சிவபெருமானின் விரதோஷ நடனம்



மோடி காகிதச் சுவடி

சத்திரபதி சிவாஜியும், அவருடைய குரு இராமதாசரும்.



சீன தேசத்திய தண்டனைகள்